# பிள்ளைப் பருவத்திலே!



குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

முகப்பு அட்டையில்

1. காந்தி
2. எடிசன்
3. தாகூர்
4. லெனின்
5. நேரு

# பிள்ளைப் பருவத்திலே



குழந்தைக் கவிஞர்
அழ. வள்ளியப்பா

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**
59. பிராட்வே · சென்னை-1.

**PILLAI-P-PARUVATHI**

(Interesting Anecdotes from the early lives of Great men)

Author : AL. Valliappa

Illustrators : 'Sagar' and 'Natanam

Copyright : Author

Publisher : Kulandai Puthaka Nilayam, Madras-17

Printer : Jeevan Press, Madras-5.

Sole Distributor : Paari Nilayam, Madras-1.

First Edition : February, 1968.

Price : Rs. 2/-

**விலை இரண்டு ரூபாய்**

வெளியிட்டோர் :

**குழந்தைப் புத்தக நிலையம்**

**சென்னை-17.**

# பிறந்தது எப்போதோ?

| பக்கம் | | |
|---|---|---|
| 9. | அலெக்ஸாந்தர் | கி. மு. 356 |
| 13. | ஜோன் ஆப் ஆர்க் | 6-1-1412 |
| 17. | கொலம்பஸ் | 1447 |
| 21. | கலீலியோ கலிலி | பிப்ருவரி, 1564 |
| 25. | ஜேம்ஸ் வாட் | 19-1-1736 |
| 29. | ஆறுமுக நாவலர் | 1822 |
| 33. | டால்ஸ்டாய் | 28-8-1828 |
| 37. | ராக் பெல்லர் | 8-7-1839 |
| 41. | எடிசன் | 11-2-1847 |

| | | |
|---|---|---|
| 45. | சாரதாமணி தேவியார் | 27-12-1853 |
| 49. | உ. வே. சாமிநாதய்யர் | 19-2-1855 |
| 53. | ரொனல்டு ராஸ் | 13-5-1857 |
| 57. | தாகூர் | 6-5-1861 |
| 61. | எம். விஸ்வேஸ்வரய்யா | 15-9-1861 |
| 65. | ஹென்றி போர்ட் | 30-7-1863 |
| 69. | வில்பர் ரைட் | 16-4-1867 |
| 73. | கஸ்தூரி பா | ஏப்ரல், 1869 |
| 77. | மகாத்மா காந்தி | 2-10-1869 |
| 81. | லெனின் | 10-4-1870 |
| 85. | அரவிந்தர் | 15-8-1872 |
| 89. | சர்ச்சில் | 30-11-1874 |
| 93. | ஐன்ஸ்டின் | 14-3-1879 |
| 97. | ஹெலன் கெல்லர் | 27-6-1880 |
| 101. | ஜவாஹர்லால் நேரு | 14-11-1889 |
| 105. | விநோபா பாவே | 11-9-1895 |
| 109. | சுபாஷ் போஸ் | 23-1-1897 |
| 113. | லால்பகதூர் சாஸ்திரி | 2-10-1904 |
| 117. | பகத் சிங் | 1907 |
| 121. | டென்சிங் | மே, 1914 |
| 125. | கென்னடி | 29-5-1917 |


## புத்தகத்தைப் பற்றி...

பிறக்கும் போதே எவரும் புகழுடன் பிறப்ப தில்லை. முயற்சியால், அறிவால், ஒழுக்கத்தால், தெய்வ பக்தியால், தேச பக்தியால், தன்னம் பிக்கையால் படிப் படியாக முன்னேறி உலகப் புகழ் பெற்றவர் பலர். அவர்களில் 30 பேரு டைய பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகளைப் பிள்ளை களுக்கு ஏற்ற வகையில் கூற முயன்றேன். 13 இந்தியப் பெரியார்களும், 17 வெளிநாட்டுப் பெரியார்களும் இப்புத்தகத்தில் இடம் பெற்றி ருக்கிறார்கள்.

பெரியோரது பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகள் மிகவும் சுவையானவை; பயனுள்ளவை. அவற் றைத் தெரிந்து கொள்ளுவதால், நமக்குத் தன்னம்பிக்கை ஏற்படுகிறது; தாழ்வு மனப்

பான்மை நீங்குகிறது. மேலும் மேலும் உயர வேண்டும் என்ற ஆசை பிறக்கிறது.

இன்று சிறுவராயிருப்பவர்களில் பலர், வருங்காலத்தில் பெரிய மனிதர்களாகத் திகழ வேண்டும்; அவர்களால் நாடும் உலகும் நற்பயன் பெறவேண்டும். இதுவே என் ஆசை. எல்லோருடைய ஆசையும் இதுவே.

இப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகளில் பலவும் மதுரை 'தமிழ்நாடு' இதழில் தொடர்ந்து வெளி வந்தவை. இவற்றைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிட அனுமதி அளித்த 'தமிழ்நாடு' ஆசிரியருக்கு என் நன்றி.

இதற்கு முன்பு நான் எழுதி வெளியிட்ட 'சின்னஞ் சிறுவயதில்' என்ற புத்தகத்திற்குத் தமிழகத்திலும், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, பர்மா போன்ற வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்புக் கிடைத்தது. குழந்தைகளும், ஆசிரியர்களும், பெற்றோரும் அளித்த அன்பாலும், ஆதரவாலும் அப்புத்தகம் இதுவரை எட்டுப் பதிப்புக்கள் வெளி வந்துள்ளது. இப் புத்தகத்திற்கும் அத்தகைய அன்பையும் ஆதரவையும் அனைவரும் அளித்தருள வேண்டுகிறேன்.

சென்னை
9-2-'68

அழ.வள்ளியப்பா.

# குதிரையை அடக்கிய சிறுவன்



கிரேக்க நாட்டிலே ஒரு பகுதி. அதை பிலிப் என்ற ஓர் அரசர் ஆண்டுவந்தார். ஒருநாள் அவர் முன்னால், ஒரு குதிரையைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். அதன் நிறம் நல்ல கறுப்பு. நெற்றியிலே நட்சத்திரம் போல் வெள்ளைப் புள்ளி இருந்தது. பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும், அதனுடைய பார்வை பயங்கரமாக இருந்தது. அது ஒரு பொல்லாத முரட்டுக் குதிரை என்பதைப் பார்த்தவுடனேயே அரசர் தெரிந்துகொண்டு விட்டார்.

“ அரசே, இதை இங்கே கொண்டு வருவதற்குள் நாங்கள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல; ஆனாலும், இதை வசப்படுத்தி விட்டால், யுத்த களத்திலே அஞ்சாது எதிரிகளை எதிர்த்து விரட்டப் பயன்படும்” என்றான் பிடித்து வந்த ஆட்களிலே ஒருவன்.

உடனே அரசர், சில குதிரை வீரர்களை வரவழைத்தார். அவர்கள் ஒவ்வொருவராக அந்தக் குதிரையை அடக்கப் பார்த்தார்கள். ஒருவராலும் முடியவில்லை. ஒரு வீரனுக்குத் தலையிலே பலமான அடி ! மற்றொருவனுக்கு முழங்காலில் இரத்தம் வழிந்தது ! இன்னொருவனுக்கு முன் பற்கள் உதிர்ந்துவிட்டன. இப்படி எல்லாரும் தோல்வி அடைந்தனர்.

அப்போது திடீரென்று, அரசரின் பக்கத்திலே உட்கார்ந்திருந்த அவருடைய மகன் எழுந்தான் ; விரைவாக ஓடினான் ; குதிரையின் அருகிலே போய் நின்றான். அவனைப் பார்த்ததும், எல்லாரும் திடுக்கிட்டனர். “என்ன, என் மகனா ! பெரிய பெரிய வீரர்களாலேயே இந்தக் குதிரையை அடக்க முடியவில்லையே! சிறுவனாகிய இவனுக்கு ஏன் இந்த வம்பு ?” என்று அரசர் முணு முணுத்தார்.

இதற்குள் அரச குமாரன் குதிரையின் கடிவாளத்தைக் கையிலே பிடித்தான். அப்போது குதிரை சும்மா இருக்கவில்லை. தன் குணத்தைக் காட்டத் தொடங்கியது. அவன் சிறிதும் அஞ்சவில்லை. குதிரையை எதிர்ப் பக்க



மாகத் திருப்பி நிறுத்தினான். மெதுவாகத் தட்டிக் கொடுத்தான். அது சும்மா நின்றது. ‘சட்’டென்று தாவி அதன் முதுகில் அமர்ந்தான். கடிவாளத்தை வெட்டி இழுத்தான். குதிரை வெகு வேகமாகப் பாய்ந்து ஓடியது.

சிறிது நேரம் ஆனது. குதிரை திரும்பிப் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்தது. அப்போது அதன் முதுகு காலியாக இருக்கவில்லை; புன்சிரிப்புடன் அரசகுமாரன் குதிரை மேல் உட்கார்ந்திருந்தான் ! குதிரை அவனுக்குப் பணிந்துவிட்டது என்பதை அரசரும் மற்றவர்களும் அறிந்து மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அரசரின் அருகிலே வந்ததும், குதிரையிலிருந்து அவன் இறங்கினான். அவனை அரசர் தட்டிக் கொடுத்தார். “மகனே, இந்த முரட்டுக் குதிரையை எப்படி அடக்கினாய்? இது என்ன மாயமா ? மந்திரமா ?” என்று கேட்டார்.

“தந்தையே, இதில் மாயமும் இல்லை; மந்திரமும் இல்லை. குதிரை ஏன் மிரளுகிறது என்று உற்றுக் கவனித்தேன். அது தன் நிழலைப் பார்த்தே பயப்படுகிறது என்பதை அறிந்தேன். அதனால்தான், அதை சூரியன் இருக்கும் திசையிலே திருப்பி நிறுத்தினேன். நிழல் பின்புறமாக விழுந்ததால், அது நிழலைப் பார்க்கவும் இல்லை; பயப்படவும் இல்லை. அமைதியாக நின்றது. அப்போது, நான் அதன் முதுகிலே ஏறி உட்கார்ந்துகொண்டேன். அன்பாக அதனுடன் பேசினேன்.

தட்டிக் கொடுத்தேன். இனி, இது என் தோழன். முரண்டு செய்யாது. தந்தையே, தாங்கள் அனுமதி கொடுத்தால், இந்தக் குதிரையை நானே வைத்துக் கொள்ளுகிறேன்'' என்ருன். அரசரும் 'சரி' என்ருர்.

அந்த அரசகுமாரன் இருபதாவது வயதில் பட்டத்துக்கு வந்தான். பல நாடுகள்மீது படையெடுத்தான். பதின்மூன்று ஆண்டுகளுக்குள் திக்விஜயம் செய்து, எகிப்து, பாரசீகம் முதலிய நாடுகளை வென்ருன். இந்தியாவுக்கும் வந்தான். ஆனுல், அதிக நாள் இங்கே தங்கவில்லை. விரைவிலே திரும்பிப் போய்விட்டான்.

வரும்போது அவனை ஏற்றி வந்த அந்தக் கறுப்புக் குதிரை, போகும் போது அவனுடன் திரும்பிப் போகவில்லை; இந்தியாவிலேயே அது இறந்து விட்டது. அப்போது அவன் அடைந்த துயரத்திற்கு அளவே இல்லை.

சொந்த நாடு திரும்பியதும், அந்தக் குதிரையின் பெயரால் ஒரு நகரத்தை அவன் அமைத்தான். அவன் பெயரிலும் இன்று எகிப்து நாட்டில் ஒரு பெரிய நகரம் இருக்கிறது. அலெக்ஸாந்திரியா என்பது அந்த நகரத்தின் பெயர்.

அப்படியானுல் அவன் பெயர்.........?

**ஆம், மகா அலெக்ஸாந்தர்!**



# சிறுமியின் தேச பக்தி



பிரெஞ்சு நாட்டில் 'டாம் ரெமி' என்று ஒரு கிராமம். அந்தக் கிராமத்தில் 550 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குடியானவன் வசித்து வந்தான். அவனுக்கு ஒரு பெண் இருந்தாள். அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. பள்ளிக்கூடத்துக்கு அவள் சென்றதே இல்லை. அப்பாவைப் போலவே அவளும் ஆடு மாடுகளை மேய்ப்பாள்; வயலில் இறங்கி வேலைசெய்வாள். அம்மாவைப் போல் நூல் நூற்பாள்; அழகாகத் தையல் வேலையும் செய்வாள்.

வேலையில்லாத போது, தோழிகளுடன் அவள் தெருவில் விளையாடிக் கொண்டிருப்பாள். அப்போது, திடீரென அவள் விளையாட்டை நிறுத்தி விடுவாள். நேராக மாதா கோயிலுக்கு ஓடுவாள். மண்டியிட்டு வணங்குவாள். திரும்பி ஓடிவருவாள். தொடர்ந்து தோழிகளுடன் விளையாடுவாள். இப்படி அடிக்கடி செய்வாள்.

அவளுக்குப் பதின்மூன்று வயதானது. அப்போது பிரெஞ்சு நாட்டின் மீது ஆங்கிலேயர் படை எடுத்திருந்தார்கள். ஆங்கிலேயருடன் சில பிரெஞ்சுக்காரரும் சேர்ந்து கொண்டார்கள். சொந்த நாட்டுக்கே துரோகம் செய்துவந்தார்கள். ஆங்கிலேயரின் படை பிரெஞ்சு நாட்டில் புகுந்து பல இடங்களைத் தாக்கியது; கொள்ளை அடித்தது; கொலை செய்தது; தீ வைத்தது.

இதையெல்லாம் கேள்விப்பட்ட அச் சிறுமி, "நம் நாட்டு மக்கள் இப்படித் துன்பப்படுகிறார்களே! எதிரிகளை எதிர்த்து விரட்ட எவருமே இல்லையா?" என்று எண்ணி எண்ணி ஏங்கினாள். அடிக்கடி இதைப் பற்றியே நினைத்து மனம் உருகினாள்.

ஒருநாள் அவள், தன் வீட்டுத் தோட்டத்தில் தனியாக உட்கார்ந்து யோசனை செய்து கொண்டிருந்தாள். அப்போது, அவளுடைய பெயரைச் சொல்லி, யாரோ அழைப்பது கேட்



டது. சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒருவரையும் காணோம்.

"கவலைப்படாதே! பிரெஞ்சு நாடு உன்னால் நன்மை அடையும்" என்று அக்குரல் கூறியது.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. மீண்டும் அதே குரல் கேட்டது. "யாரது?" என்று மேலே பார்த்தாள். எவருமே தென்படவில்லை. மூன்றாவது முறையும் அதே குரல் கேட்டது. "ஆ! வானத்தில் இருந்தல்லவா இக் குரல் கேட்கிறது! ஆம், அசரீரிதான். கடவுளே பேசுகிறார்!" என்று அவள் நினைத்தாள்.

அன்று முதல் அவள் போக்கே மாறிவிட்டது. அடிக்கடி இந்த மாதிரிக் குரலைக் கேட்டாள். கேட்கக் கேட்க அவளுக்கு எப்படியாவது தன் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆவேசம் ஏற்பட்டது.

ஒருநாள் வீட்டைவிட்டு அவள் புறப்பட்டு விட்டாள். பிரெஞ்சு நாட்டு மன்னனைக் காணச் சென்றாள். வழியில் எத்தனையோ தொல்லைகள்! எல்லாவற்றையும் கடந்து அரசனைக் கண்டாள். "ஆங்கிலேயருடன் போர் புரிய வந்திருக்கிறேன். என்னுடன் படை வீரர்களை அனுப்புங்கள். வெற்றி நிச்சயம் கிடைக்கும்" என்று அரசனிடம் கூறினாள். அவள் பேச்சைக் கேட்டு அரசனும் மற்றவர்களும் சிரித்தார்கள். ஆனாலும், அவள் மனந் தளரவில்லை. மன்றாடி வேண்டினாள்.


கடைசியில் அரசன் ஒரு படையை அவளுடன் அனுப்பினுன். ஆணைப் போல அவள் போர் உடை தரித்துக் கொண்டாள். குதிரை மீது ஏறி எதிரிகளைத் தாக்கப் புறப்பட்டாள்.

அச்சிறுமியின் நாட்டுப்பற்று, மன உறுதி, விடா முயற்சி முதலியவற்றைக் கண்டனர் பிரெஞ்சு வீரர்கள். அவர்களுக்கும் ஒரு புத்துணர்ச்சி பிறந்தது. வீரமுடன் போர்க் களத்தில் இறங்கினர். அவள் தலைமையில் சண்டையிட்டனர். முதல் போரிலே வெற்றி கிடைத்தது. பல இடங்களில் அவள் ஆங்கிலேயருடன் போர் புரிந்தாள். இரு முறை அவள்மீது அம்பு பாய்ந்தது. உடலெல்லாம் இரத்தம்! அப்படியிருந்தும் அவள் போரை நிறுத்தவில்லை. தொடர்ந்து போரிட்டாள். பலமுறை வெற்றி பெற்ற அவள் கடைசியில் ஓரிடத்தில் தோல்வி அடைந்தாள். காரணம், சொந்த நாட்டினரே அவளுக்குத் துரோகம் செய்து விட்டார்கள்!

தோற்றுப்போன அவளை எதிரிகள் சிறையில் அடைத்தார்கள்! அவள் மீது வழக்குத் தொடுத்து, அவளைக் குற்றவாளி என்ருர்கள். பிறகு, சந்தை கூடும் இடத்தில் ஒரு கம்பத்திலே அவளைக் கட்டிவைத்துச் சுற்றிலும் தீ வைத்தார்கள். 19 வயதிலே அவளை எரித்து விட்டார்கள்! அவளது உடலை எரித்தாலும், அவளது பெயரை எரிக்க முடிந்ததா? ஜோன் ஆப் ஆர்க் என்ற பெயர் இன்று சரித்திரத்தில் நிலைத்துவிட்டதே!



# சிறுவன் போட்ட திட்டம்



இத்தாலி தேசத்திலே ஜினேவா என்ற ஒரு துறைமுகப் பட்டினம் இருக்கிறது. அந்தப் பட்டினத்தில் 500 ஆண்டுகளுக்கு முன்பு ஆட்டு உரோமம் கத்தரிக்கும் வேலையை ஒருவர் செய்து வந்தார். அவருடைய வீடு கடற்கரை ஓரமாக இருந்தது.

அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் மிகவும் சுறுசுறுப்பானவன். நல்ல பலசாலியாகவும் இருந்தான்.

அந்தக் கடற்கரையிலிருந்து பாய்மரக் கப்பல்களில் பலர் போவார்கள். சிலர் அங்கு

வந்து இறங்குவார்கள். அவர்கள் வருவதையும் போவதையும் கரையில் உட்கார்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பான் அந்தச் சிறுவன்.

சில மாலுமிகள், தாங்கள் போய்ப் பார்த்து வந்த இடங்களைப் பற்றிக் கதை கதையாகக் கூறுவார்கள். சிலர் நடுக் கடலிலே புயற் காற்று வந்ததையும், அதைச் சமாளித்ததையும் விரிவாக எடுத்துச் சொல்லுவார்கள். வேறு சிலர், சுறுமீன், திமிங்கலம் முதலியவற்றுடன் சண்டைபோட்டுத் தப்பியவிதத்தை அழகாக அபிநயத்தோடு கூறுவார்கள். இவற்றையெல்லாம் வாயைப் பிளந்தபடி வியப்போடு அவன் கேட்டுக் கொண்டிருப்பான்.

சில நாட்கள் சென்றன. 'நாமும் கப்பல் ஏறிக் கடலிலே போக வேண்டும்' என்ற ஆசை அவனுக்குத் தோன்றியது. நாள் ஆக ஆக அந்த ஆசை அவனுடனே வளரத் தொடங்கியது.

ஒரு நாள், அவன் பள்ளிக்கூடத்தில் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அதில், "உலகம் தட்டையாக இருப்பதாகவே எல்லோரும் நினைக்கிறார்கள். அது தவறு. உலகம் உருண்டையாகத்தான் இருக்கிறது" என்று ஓர் அறிஞர் எழுதியிருந்தார். அதைப் பற்றி ஆசிரியர்களிடம் அவன் கேட்டான். அவர்கள், "எவனோ ஒருவன் உளறியிருக்கிறான். அதை நம்பாதே! உலகம் தட்டையா



கத்தான் இருக்கிறது" என்றார்கள். சிறுவனுக்கு யார் கூறுவது சரி என்று தெரியவில்லை.

ஒரு நாள் அவன் சாப்பிடுவதற்காக ஓர் ஆரஞ்சுப் பழத்தை எடுத்தான். அதைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் போது பின்புறத்திலிருந்து ஒரு வண்ணாத்திப் பூச்சி பழத்தின் மேல் ஏறி வருவதைப் பார்த்தான். முதலில், அதன் இறகின் மேல் பகுதி மட்டுமே தெரிந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இறகின் முழுப் பகுதியும் தெரிந்தது. வண்ணாத்திப் பூச்சி பழத்தின் மேல் ஏறி மேலே வந்ததும், அதன் முழு உருவமும் நன்றாகத் தெரிந்தது.

உடனே அச்சிறுவன், "சந்தேகமில்லை. பூமி உருண்டைதான். பூமி உருண்டையாக இருப்பதால்தான், கப்பல் வெகு தூரத்தில் வரும்போது, முதலில் தலைப்பாகம் மட்டுமே தெரிகிறது. நெருங்கி வர வரத்தான் நடுப்பாகமும், அடிப்பாகமும் தெரிகின்றன" என்ற முடிவுக்கு வந்தான். இதைத் தன் தோழர்களிடத்திலே கூறினான். எல்லோரும் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள். சிலர் 'பைத்தியம்' என்று பட்டம் சூட்டினார்கள். ஒருவன், "அப்படியானால் இந்தியாவிலும், சீனாவிலும் இருப்பவர்கள் பூமியில் தலைகீழாகத் தொத்திக் கொண்டுதான் நடக்கிறார்கள் போல் இருக்கிறது!" என்று கேலி செய்தான்.

"என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். பூமி உருண்டைதான்" என்று அச்சிறுவன் பிடிவாதமாகக் கூறினான். கூறியதோடு நிற்கவில்லை. "பூமி உருண்டையாக இருப்பதால், நான் இந்தியாவுக்குக் குறுக்கு வழி கண்டு பிடித்து அங்கே போகவும் திட்டம் போட்டிருக்கிறேன்" என்றான்.

தான் போட்ட திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவன் பதினான்காவது வயதில் ஒரு கப்பலிலே வேலைக்காரனாகச் சேர்ந்தான். எல்லாவற்றையும் கற்றுக் கொண்டான். விரைவிலே அவனும் ஒரு மாலுமி ஆனான். மூன்று பெரிய கப்பல்களுடனும், 88 ஆட்களுடனும் இந்தியாவுக்குக் குறுக்கு வழி கண்டு பிடிக்கப் புறப்பட்டான். கரையைக் கண்டதும், 'இந்தியா வந்துவிட்டோம்' என்று அவனும் அவனுடைய ஆட்களும் ஆரவாரம் செய்தார்கள். துள்ளிக் குதித்தார்கள்.

ஆனால், அவர்கள் கண்டது இந்தியா அல்ல; ஒரு புதிய உலகத்தையே கண்டு பிடித்து விட்டார்கள்! ஆம், 'அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கொலம்பஸ்! அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் கொலம்பஸ்' என்று எத்தனை மாணவர்கள் நெஞ்சிலே குத்திக் கொண்டு இன்றும் நெட்டுருப் போடுகிறார்கள்!



# விளக்கும் கணக்கும்



இத்தாலி தேசத்திலே பைசா என்று ஒரு நகரம். அந்த நகரத்திலே ஒரு மாதா கோயில். அக்கோயிலில் ஆயிரக் கணக்கான மக்கள் அன்றைக்குக் கூடியிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் கண்களை மூடிக் கடவுளைத் தொழுது கொண்டிருந்தார்கள். ஆனால், அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு மாணவன் மட்டும் கண்களை மூடவுமில்லை; கடவுளைத் தொழவும் இல்லை. கண்களை அகல விரித்து அண்ணாந்து பார்த்துக் கொண்டே நின்றான்.

அப்படி அவன் கவனத்தைக் கவர்ந்தது எது? வேறொன்றும் அல்ல; ஒரு கண்ணாடி விளக்குத்தான். மேல் கூரையிலிருந்து

சங்கிலியால் கட்டித் தொங்கவிடப்பட்ட விளக்கு காற்றிலே அப்படியும் இப்படியுமாக ஆடிக்கொண்டிருந்தது. அதைத்தான் அவன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வேகமாகக் காற்று அடிக்கும்போது அந்த விளக்கு அதிகதூரம் போய்வரும்; மெதுவாகக் காற்று அடிக்கும்போது, குறைந்த தூரமே போய் வரும். அந்த விளக்கு ஒரு முறை இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்திற்குப் போவதற்கு எவ்வளவு நேரமாகிறது என்று அந்த மாணவன் கணக்கிட்டான்.

எப்படிக் கணக்கிட்டான், தெரியுமா? வைத்தியர்கள் நாடி பார்ப்பது போல், தன் இடது கையில் வலது கை விரலை வைத்து நாடித் துடிப்பின் மூலம் கணக்கிட்டான். அதிக தூரம் போய்வர எவ்வளவு நேரம் ஆகிறது,குறைந்த தூரம் போய்வர எவ்வளவு நேரம் ஆகிறது என்று கணக்கெடுத்தான். இரண்டுக்கும் ஒரே நேரம்தான் ஆனது.

300 ஆண்டுகளுக்கு முன்பு காலத்தை அறியக் கடிகாரங்கள் இல்லை. மாதா கோயில் விளக்கு அசைந்ததைப் போலத்தானே கடிகாரத்திலுள்ள பெண்டுலமும் அசைகிறது? அந்த மாணவன் கண்ட உண்மையை வைத்துத்தான் கடிகாரங்கள் அமைக்கப்பட்டன.

அந்த மாணவனுடைய குடும்பமோ மிகவும் ஏழை. ஏழையாயிருந்தாலும், அவன்



மிகவும் புத்திசாலியாக இருந்தான். சிறு வயதிலே அவன் சிறுசிறு கருவிகளை வைத்துக் கொண்டு வித்தைகள் செய்து காட்டுவான். அவற்றைக் கண்டு அவன் பள்ளித்தோழர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் அடைவார்கள். அவன் நன்றுகப் பாடுவான். அழகாக ஓவியம் வரைவான்.

அவன், யார் எதைச் சொன்னுலும் உடனே நம்பிவிடமாட்டான். தானே செய்து பார்த்துத்தான் ஒரு முடிவுக்கு வருவான். இதனுல், அவனுக்கும் அவனுடைய மாணவத் தோழர்களுக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுவதுண்டு. சில சமயங்களில் ஆசிரியர்களுடனும் அவன் விவாதம் செய்வான். இதனுல், அவனை எல்லோரும் 'வம்பன்' என்றே அழைக்கத் தொடங்கினர்.

அந்த வம்பன்தான் வானத்தைப் பார்க்கும் தொலை நோக்கியைக் கண்டுபிடித்தான். காண முடியாத வானக் காட்சிகளை எல்லாம் பிறருக்குக் காட்டினுன். அதற்கு முன்பே ஹாலந்து தேசத்தில் ஒரு தொலை நோக்கி (டெலிஸ்கோப்) கண்டுபிடித்திருந்தார்கள். ஆனுல், அதனுல் வானக் காட்சிகளைக் காணமுடியாது. தரையில் உள்ள தூரக் காட்சிகளைத்தான் காண முடியும்.

டெலிஸ்கோப்பைக் கண்டுபிடித்த அதே

மாணவன் வெப்பமானியையும் முதல் முதலாகக் கண்டுபிடித்தான். இவை மட்டுமா?

சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்றே பெரும்பாலோர் அக்காலத்தில் நம்பியிருந்தார்கள். "அது தவறு. பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது" என்பதைப் பல ஆதாரங்களுடன் அவன் எடுத்துச் சொன்னான். புத்தகங்கள் எழுதி விளக்கினான். "மதக் கொள்கைகளுக்கு எதிராக இவன் பேசுகிறான்; எழுதுகிறான்" என்று சொல்லி அவனைப் பிடித்துச் சிறையிலே அடைத்து வைத்தார்கள். சிறையிலே அவன் 22 நாட்கள் இருந்தான்! பிறகு விடுதலையானான்.

விடுதலையாகி வெளிவந்தது முதல், மும்முரமாகப் பல நூல்களை எழுதினான். தான் கண்டுபிடித்த விஞ்ஞான உண்மைகளை விளக்கிக் கூறினான்.

காணமுடியாத வானக் காட்சிகளை யெல்லாம் காண்பதற்கு வழிகாட்டிய அவன் 73 வது வயதில், எதிரில் இருப்பவர்களைக் கூடக் காணமுடியாமல் தவித்தான். ஆம், அந்த வயதில் குருடாகி விட்டான்! அவன் கண் பார்வையை இழந்த 5 ஆண்டுகளில், அவனை இந்த உலகம் இழந்து விட்டது?

விஞ்ஞானிகளுக் கெல்லாம் விஞ்ஞானியாக விளங்கிய அவன் பெயர்தான் **கலீலியோ கலிலி.**



# மூக்கும் மூடியும்!



"அம்மா, தபால்"

தபால்காரர் குரல் கேட்டதும் வீட்டுக்குள்ளிருந்த அம்மா வெளியே வந்தாள்; கடிதத்தைக் கையிலே வாங்கினாள்; தபால் முத்திரையைப் பார்த்தாள். உடனே அவள் முகம் மலர்ந்தது.

அவளுடைய மகன் அந்தக் கிராமத்திலிருந்து சிறிது தூரத்திலுள்ள பட்டணத்துக்குச் சென்றிருந்தான். அது பள்ளி விடுமுறைக் காலம். அந்தப் பட்டணத்திலிருந்துதான் கடிதம் வந்திருந்தது. அவளுடைய தோழி அதை அனுப்பி யிருந்தாள். கடிதத்தை ஆவலோடு பிரித்துப் படிக்கத் தொடங்கினாள்.

"அன்புள்ள தோழி, இனிமேல் உன் மகன் இங்கு இருந்தால், எங்கள் வேலையெல்லாம் கெட்டுவிடும். நீ உடனே இங்கு வந்து அவனைக் கையோடு அழைத்துக் கொண்டு போய்விடு" என்று கடிதத்தின் ஆரம்பத்தில் இருந்தது.

இதைப் படித்ததும், அந்த அம்மாள் திடுக்கிட்டாள்.

'விடுமுறை கழிந்த பிறகுதான் உன் மகனைத் திருப்பி அனுப்புவேன் என்று ஆசையோடு என் மகனை அழைத்துச் சென்றாளே, அந்தத் தோழியா இப்படி எழுதியிருக்கிறாள்! என் மகன் வம்பு வழக்குக்குப் போகமாட்டானே! என்ன காரணமோ?' என்று கவலையோடு மேலும் படித்தாள்.

"உன் மகன் இங்கு வந்தது முதல், இரவு வெகு நேரம் சென்றுதான் நாங்கள் தூங்குகிறோம். இதனால், காலையில் விரைவிலே எழுந்து வேலைகளைக் கவனிக்க முடியவில்லை. அவன் கதை சொல்ல ஆரம்பித்து விட்டால், நேரம் போவதே தெரிவதில்லை. பிள்ளைகளோடு நாங்களும் சேர்ந்து மணிக் கணக்காகக் கேட்டுக்கொண்டேயிருக்கிறோம். வெகுநேரம் சென்ற பிறகுதான், 'அடடா இவ்வளவு நேரம் விழித்திருந்து விட்டோமே!' என்று தோன்றுகிறது. ஆனாலும், அவன் கதையைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. அவன் இங்கு இருந்தால், தினமும் இப்படித் தான் நடக்கும். ஆகையால், தயவு செய்து விரைவில் அழைத்துப் போய் விடு."



கடிதம் முழுவதையும் படித்து முடித்ததும், "பூ! இதற்குத்தானா இப்படி எழுதியிருக்கிறாள். என்னவோ ஏதோ என்று பயந்து போனேன்" என்று கூறிச் சிரித்தாள் அந்த அம்மாள்.

இப்படிச் சிறிய வயதிலே கதை சொல்வதில் வல்லவனாக இருந்த அவன், பெரியவனானதும், பெரிய கதாசிரியனாகி விட்டானோ? இல்லை.

பன்னிரண்டு வயதுப் பையனாக இருக்கும்போது, அவன் அடுப்புக்குப் பக்கத்திலே போய் உட்கார்ந்து கொள்வான். கேத்தலில் நீர் கொதித்துக் கொண்டிருக்கும். நன்றாகக் கொதித்தவுடன் கேத்தலின் மூக்கு வழியாக 'குப்குப்' என்று ஆவி வெளிவருவதைப் பார்ப்பான்.

"இந்த ஆவி வெளியில் வராதபடி கேத்தலின் மூக்கை அடைத்துவிட்டால், என்ன நடக்கும்?" என்று ஒரு நாள் எண்ணினான். உடனே அந்த மூக்கை மூடினான். அப்போது நீராவியால் வெளியில் வர முடியவில்லை.

சிறிது நேரம் சென்றது. கேத்தலின் மூடி மெல்ல அசைய ஆரம்பித்தது. அப்போது சிறிது இடைவெளி ஏற்பட்டது. நீராவி கொப்புளித்துக்கொண்டு வெளியே வந்தது.

அதை அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டே இருந்தான்.

மேலும் சிறிது நேரம் சென்றது. கேத்த லின் மூடி மேலே எழும்ப ஆரம்பித்தது. அப் புறம்...? அப்புறம் என்ன? மூடியைத் தள்ளி விட்டு நீராவி வேகமாக வெளிவரத் தொடங் கியது. அதை அவன் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவனுடைய அம்மா வந் தாள். "பாடங்களைப் படிக்காமல் இப்படி வீண் பொழுது போக்குகிறாயே!" என்று கூறி வருத்தப்பட்டாள்.

ஆனால், அவன் கண்டுபிடித்த நீராவி என் ஜினைப் பின்பற்றியே புகை வண்டிகளும், கப்பல்களும் ஒருகாலத்தில் ஓடப்போகின்றன என்பது அந்த அம்மாவுக்கு அப்போது தெரியுமா?

அவனுக்கு மக்கள் சிலை எடுப்பார்கள் என்றும், அவனைப் பற்றி ஆங்கிலப் பெருங் கவிஞரான வேர்ட்ஸ் வொர்த் புகழ்மாலை சூட்டு வார் என்றும் அப்போது அந்த அம்மா எதிர் பார்த்திருப்பாளா?

ஸ்காட்லாந்து தேசத்தில் பிறந்த ஜேம்ஸ் வாட் செய்த ஆராய்ச்சியின் பயனாகத் தான் இன்று நீராவி எந்திரங்களை நாம் காண் கிறோம்; அவற்றால் பயன் அடைகிறோம்.



# 9 வயதில் நாடக ஆசிரியர்!



யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அந்த ஊரில் 150-ஆண்டு களுக்கு முன்பு கந்தப்ப பிள்ளை என்ற ஒரு வைத்தியர் இருந்தார். அவர் உடலுக்கு மருந்து கொடுத்து வந்ததோடு, உள்ளத்திற் திற்கும் மருந்து கொடுக்க நினைத்தார். நல்ல நல்ல நாடகங்களை எழுதினார். அந்த நாடகங் களில் உயர்ந்த கருத்துக்கள் இருந்தன. மக்கள் அந்த நாடகங்களைப் பார்த்து மனம் திருந்த வேண்டும் என்பதே அவர் ஆசை.

சிறிது நேரம்கூட அவர் சும்மா இருக்க மாட்டார். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம்

நாடகத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார். அல்லது, நாடகம் எழுதிக்கொண்டிருப்பார்.

ஒரு நாள், கையிலே ஏட்டையும் எழுத்தாணியையும் வைத்து அவர் ஏதோ ஒரு நாடகத்தை எழுதிக் கொண்டிருந்தார். திடீரென்று எழுதுவதை நிறுத்தினுர். அப்படியே சாய்ந்துவிட்டார். உடனே எல்லோரும் அவர் அருகிலே ஓடி வந்தார்கள். மூக்கிலே கை வைத்துப் பார்த்தார்கள். "மூச்சு நின்றுவிட்டது!" என்பதை அறிந்தார்கள்.

"அந்தோ, நாடகம் முடிவதற்குள் இவர் ஆயுள் முடிந்து விட்டதே!" என்று எல்லோரும் வருந்தினுர்கள்.

கந்தப்ப பிள்ளைக்கு ஆறுமுகம் என்று ஒரு மகன் இருந்தான். அவனுக்கு அப்போது வயது ஒன்பது. அந்த வயதிலே அவன் மிகவும் கெட்டிக்காரனுயிருந்தான். தமிழிலே நல்ல ஆர்வம் இருந்தது. "நம் தந்தை எழுதிய நாடகம் அரை குறையாக இருக்கிறது. அதை எப்படியாவது தொடர்ந்து எழுதி முடித்துவிட வேண்டும்" என்று ஆறுமுகம் ஆசைப்பட்டான்.

தந்தை எழுதிய நாடகத்தைப் பலமுறை படித்தான். அது பற்றியே பல நாட்கள் சிந்தித்தான். பிறகு, எழுத்தாணியை எடுத்தான். ஏட்டிலே எழுதினுன். நாடகத்தை ஒரு வழியாக முடித்தான். அண்ணனிடம் கொண்டுபோய்க் காட்டினுன். அவர் நாடகத்தைப் படித்துப் பார்த்தார்.



"தம்பி, மிக நன்ருக இருக்கிறது. நம் தந்தை எழுதுவதைப் போலவே எழுதியிருக்கிருய். நம் தந்தையின் ஆசையை நிறைவேற்றிவிட்டாய்!" என்று கூறி ஆறுமுகத்தைக் கட்டித் தழுவினுர்.

பர்சிவல் துரை என்ற ஆங்கிலப் பாதிரியார் நடத்திய பள்ளிக்கூடத்தில் சேர்ந்து ஆறுமுகம் படித்தான். தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பெற்ருன். சிறு வயதிலேயே ஆறுமுகத்திற்கு இருந்த தமிழ்ப் புலமையைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள்.

மாணவனுயிருந்த போதே கீழ் வகுப்புகளுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லிக் கொடுக்கும்படி பர்சிவல் கூறினுர். ஆறுமுகத்திடம் மாணவர்கள் மட்டுமா தமிழ் கற்றுக் கொண்டார்கள் ? அந்தப் பர்சிவல் பாதிரியாரும் கற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டார்! விரைவிலே அவர் தமிழை நன்ருகக் கற்றுக்கொண்டார். ஆறுமுகத்தின் உதவியுடன் பைபிள் என்னும் கிறிஸ்தவ மத நூலைத் தமிழில் மொழி பெயர்த்தார். எல்லோரும் அந்த மொழி பெயர்ப்பை மிகவும் பாராட்டினுர்கள்.

இளம் வயதிலே இவ்வளவு திறமையுடன் விளங்கிய ஆறுமுகம் வளர்ந்து வாலிபரானதும் ஏட்டிலிருந்த பல இலக்கியங்களை அச்சிட்டு வெளியிட்டார். கால் புள்ளி, அரைப் புள்ளி, கேள்விக் குறி, ஆச்சரியக் குறி முதலியவற்றை முதன் முதலாகத் தமிழ் நூல்களில் சேர்த்து அச்சிட்டவர் அவரே !

சிறுவர்களுக்காக அவர் 'பால பாடங்கள்', நீதி நூல்கள், கணித நூல்கள், பூகோளம் முதலிய புத்தகங்களை எழுதினார்.


பல பழைய இலக்கிய நூல்களுக்கு உரை எழுதினார். திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் முதலியவற்றை உரை நடையில் எழுதி வெளியிட்டார்.

அவர் சிறந்த சொற்பொழிவாளராகவும் விளங்கினார். நல்ல தமிழில் அழகாகப் பேசுவார்; சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதில் வல்லவர். அவரது நாவன்மையை அறிந்து, திருவாவடுதுறை மடத்தில் அறிஞர்கள் கூடி 'நாவலர்' என்ற பட்டத்தை அவருக்குச் சூட்டினார்கள்.

'ஆறுமுக நாவலர்' என்றால், தமிழ் தெரிந்த அனைவருக்கும் இன்று தெரிந்திருக்கிறது ! இலங்கைக்குச் சென்றால் நாவலர் மண்டபம், நாவலர் வீதி, நாவலர் வாசகசாலை, நாவலர் அச்சுக்கூடம், நாவலர் வித்தியாசாலை என்று பல நினைவுச் சின்னங்களைக் காணலாம்.



# அப்பாவும் பாட்டியும்



ரஷ்யாவில் மாஸ்கோ நகரத்திலே ஒரு தெரு. அந்தத் தெருவிலே ஒரு வீடு. அந்த வீட்டின் வாயிலில் எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் உட்கார்ந்து இருபுறமும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தான். திடீரென்று "அதோ வருகிறார் அப்பா ! அதோ வருகிறார் அப்பா !" என்று கூவிக்கொண்டே குதித்து எழுந்தான்.

அவன் குரலைக் கேட்டு உள்ளேயிருந்த அத்தை ஓடி வந்தாள். "பாவம், எத்தனை தடவை சொன்னாலும் என்னை நீ நம்பமாட்டேன் என்கிறாயே! உன் அப்பாவை இனி நாம் பார்க்கவே முடியாது. செத்துப் போனவர்

எப்படித் திரும்பி வருவார்?" என்று கூறினாள்.

சிறுவன், அத்தை சொன்னதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. தெருவில் சிறிது தூரத்தில் வந்துகொண்டிருந்த ஒருவரைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே நின்றான். "அப்பா! அப்பா!" என்று ஆசையோடு அவன் கூவினான். அவர் அருகிலே வந்தார். அவர் முகத்தைப் பார்த்ததும், அவன் முகத்திலே ஏமாற்றக் குறி தெரிந்தது. "இவரா என் அப்பா? இல்லை; இல்லவே இல்லை. இவர் யாரோ!" என்று கூறிவிட்டுத் தொப்பென்று தரையில் உட்கார்ந்துவிட்டான்.

இப்படி ஒரு நாளா, இரண்டு நாளா? ஏழெட்டு மாதங்களாகத் தந்தையை எதிர் பார்த்து எதிர்பார்த்து அவன் ஏமாந்து கொண்டிருந்தான். இறந்தவர் எப்படி உயிர் பெற்று வருவார்?

இரண்டு வயதுக் குழந்தையாக இருக்கும்போதே அவனுடைய தாய் இறந்து விட்டாள். தாய் இறந்த பிறகு அவனைக் கிராமத்திலிருந்து நகரத்திற்கு அவனுடைய அத்தை அழைத்துவந்தாள். செல்லமாக வளர்த்துவந்தாள். தந்தை கிராமத்திலே வாழ்ந்தார். அடிக்கடி நகரத்திற்கு வருவார்; மகனைப் பார்த்துவிட்டுப் போவார்.

ஒருநாள், அவர் கிராமத்திலே நண்பர் ஒரு



வரைப் பார்க்கச் சென்றார். தெருவில் நடந்து போய்க் கொண்டிருக்கும்போது திடீரென்று அவருக்கு வலிப்பு வந்துவிட்டது. நடுத்தெரு விலே அவர் விழுந்தார். சில விநாடிகளில் அவர் இறந்துவிட்டார்.

நகரத்திலே இருந்த சிறுவனின் அத்தைக் குத் தகவல் அனுப்பினார்கள். அவள், சிறுவ னிடம் தந்தை இறந்த செய்தியை மிகுந்த வருத்தத்தோடு கூறினாள். ஆனால், அவன் அவள் பேச்சை நம்பவில்லை. "நீ பொய் சொல் கிறாய். என் அப்பா என்னைப் பார்க்க வரு வார். நிச்சயம் வருவார்" என்று கூறினான். கூறியதோடு நிற்கவில்லை. ஒவ்வொரு நாளும் வாயிற்படியில் உட்கார்ந்துகொண்டு தந்தையின் வரவை எதிர்பார்த்துக் கொண்டே யிருப்பான். நன்றாக இருட்டிய பிறகே வீட் டுக்குள் வருவான்.

தந்தை இறந்த ஒன்பதாவது மாதம் அவ னுடைய பாட்டி இறந்துவிட்டாள். அவள் அருகிலே சென்று அவன் உற்றுப் பார்த்தான். அவள் வாய் திறக்கவில்லை. கண் விழிக்க வில்லை. அசையாமல் கிடப்பதைக் கண்டான். அவளை அடக்கம் செய்வதையும் அவன் நேரிலே பார்த்தான். அப்போதுதான் சாவு என்றால் என்ன என்பது அவனுக்குத் தெரிந் தது. "பாட்டியை இனிப் பார்க்கமுடியாது. நம் அப்பாவும் இப்படித்தான் இறந்திருக்க

வேண்டும். இனி, அவரையும் பார்க்க முடியாது'' என்ற முடிவுக்கு வந்தான்.

இப்படிப் பத்து வயதுவரை ஒன்றும் அறியாத குழந்தையாக இருந்த அவன், உலகம் போற்றும் ஒரு பெரிய ஞானியாகி விட்டான். ரஷ்ய ஞானி டால்ஸ்டாய் என்ருல் “ஓ, அவரா! காந்தி மகானே தம்முடைய குரு எனக் கொண்டாடியவரல்லவா அவர்?'' என்று கூறத் தொடங்கிவிடுவீர்கள்.

ஆம், பெரும் பணக்காரக் குடும்பத்திலே, 42 அறைகள் கொண்ட மாளிகையிலே அவர் பிறந்தார்; தம்முடைய நிலங்களையெல்லாம் ஏழைகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு, ஏழையோடு ஏழையாக வாழ்ந்தார். நூற்றுக்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதி மக்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அந்தப் புத்தகங்களின் மூலம் நிறைய வருமானம் வந்திருக்கும் என்றுதானே நினைக்கிறீர்கள்? இல்லை. அவர் வருமானத்திற்காக எழுதவில்லை. தாம் எழுதிய புத்தகங்களை யார் வேண்டுமானுலும், எந்த மொழியில் வேண்டுமானுலும் இலவசமாக வெளியிட்டுக் கொள்ளலாம் என்று அவர் கூறிவிட்டார். அவரைப் பற்றி இதுவரை வெளி வந்துள்ள புத்தகங்கள் சுமார் 25,000 இருக்கலாம். அப்படியென்ருல், அவர் எவ்வளவு பெரிய மகான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?



# வான்கோழி வியாபாரம்



'ஜான்' என்று அம்மா அழைத்தாள்.

“என்ன அம்மா?'' என்று கேட்டுக் கொண்டே மகன் அருகிலே சென்ருன்.

அம்மா ஒரு சிறு கூடையை ஜானிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கிப் பார்த்தான். உள்ளே பத்து வான்கோழி முட்டைகள் இருந்தன. “நன்றி அம்மா'' என்று கூறிவிட்டு அந்த முட்டைகளுடன் அவன் தோட்டத்திற்கு ஓடிஞன்.

இப்படி அடிக்கடி அம்மா அவனிடம் முட்டைகளைக் கொடுப்பாள். அவன் அந்த முட்டைகளைப் பத்திரமாக அடைகாக்க வைப்பான். குஞ்சுகள் பொரித்தவுடன் அவற்றை

நன்றாக வளர்ப்பான். கொழு கொழு என்று வளர்ந்ததும் நல்ல விலைக்கு விற்றுவிடுவான்.

விற்றுவந்த பணத்தை எடுத்துக்கொண்டு அம்மாவிடம் செல்வான். "அம்மா, நீ தந்த முட்டைக்கு இதோ பணம்" என்று கூறிச் சரியாகக் கணக்குப் பார்த்துக் கொடுத்துவிடுவான். இப்படி ஏழு வயதிலே அவன் வான்கோழி வியாபாரத்தைத் தொடங்கிவிட்டான். பகலெல்லாம் பள்ளியில் படிப்பான். காலையிலும் மாலையிலும் வான்கோழிகளை வளர்ப்பதிலும் விற்பதிலும் நேரத்தைப் போக்குவான்.

அவன் ஒரு கணக்குப் புத்தகம் வைத்திருந்தான். அதன் அட்டை மிகவும் கனமாக இருக்கும். அது என்ன, பள்ளிக்கூடக் கணக்குப் புத்தகமா? இல்லை; வான்கோழி சம்பந்தமான வரவு செலவுப் புத்தகம்தான்! அந்தப் புத்தகத்தை அடிக்கடி புரட்டிப் பார்ப்பான். நாளுக்கு நாள் இலாபம் பெருகி வருவதைக் கண்டு உள்ளூர மகிழ்ச்சியடைவான்.

அவன் வீட்டு அடுக்களையில் ஓர் உடைந்த தேநீர்க் கோப்பை இருக்கும். அதில்தான் பணத்தைப் போட்டுவைப்பான். சிலர் அவனிடம் கடன் கேட்பார்கள். நல்ல வட்டிக்குக் கடன் கொடுப்பான்.

சின்ன வயதிலே வியாபாரம் செய்யவேண்டும், கை நிறையச் சம்பாதிக்கவேண்டும்



என்று ஜான் ஆசைப்பட்டான். ஆனால், உலகிலேயே, மிகமிகப்பெரிய கோடீஸ்வரனாக அவன் ஒரு காலத்தில் விளங்கப் போகிறான் என்பது அப்போது யாருக்குத் தெரியும்? அவனுக்கே தெரியாதே!

மிகப் பெரிய கோடீஸ்வரனாக விளங்கியதோடல்ல; மிகப் பெரிய கொடையாளியாகவும் அவன் விளங்கினான். 'ஜான். டி.' என்று சொன்னால் அமெரிக்கர் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். **ஜான். டி. ராக்பெல்லர்** என்று சொன்னால் உலகின் பல பகுதிகளில் உள்ளவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

'ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி' என்ற எண்ணெய்க் கம்பெனியைத் தொடங்கி அவர் லட்சம் லட்சமாகச் சம்பாதித்தார். பெட்ரோல், இருப்புப் பாதை முதலியவற்றின் மூலமாக, மொத்தம் அவர் சம்பாதித்த தொகை 100 கோடி டாலருக்குமேல் இருக்கும் என்கிறார்கள். (அதாவது கிட்டத்தட்ட 750 கோடி ரூபாய்.) சம்பாதித்ததில் பாதிக்குமேல் அவர் நன்கொடையாக வழங்கிவிட்டார். அவரால் 1913 இல் நிறுவப்பட்ட 'ராக்பெல்லர் பவுண்டேஷன்' இன்று எத்தனையோ நல்ல காரியங்களுக்கு உதவி வருகிறது. கல்வி, மருத்துவம், விஞ்ஞான ஆராய்ச்சி முதலிய பல துறைகளிலும் உலகின் பல பாகங்களிலும் தொண்டு செய்து வருகிறது.

ராக்பெல்லர், உயர்நிலைப் பள்ளியுடன் படிப்பை முடித்துக் கொண்டார். பல்கலைக் கழகப் படிப்பை அவர் எட்டிக்கூடப் பார்த்த தில்லை. ஆனாலும், சிகாகோப் பல்கலைக் கழகத்திற்கு அவர் ஒரு கோடி பவுனுக்குமேல் கொடுத்திருக்கிறார்!

ராக்பெல்லர் எதிலுமே அவசரப்பட மாட்டார்; ஒருபோதும் ஆத்திரப்படமாட்டார். பகல் சாப்பிட்டவுடன் அரைமணி நேரம் படுத்துத் தூங்குவார். இவற்றால்தான் அவர் 97 வயதுவரை இந்த உலகில் ஆரோக்கியத்துடன் வாழமுடிந்ததாம். அவர் இறந்தபோது பல் இல்லாத கிழவராக இறக்கவில்லை. 32 பற்களும் அப்படியே ஆடாமல் அசையாமல் இருந்தனவாம்! அவற்றில் ஒன்றுகூடப் பொய்ப் பல் இல்லை. அவரிடம் சில கண்டிப்பான பழக்க வழக்கங்கள் இருந்தன. அவர் சீட்டாட மாட்டார்; திரைப்படம் பார்க்கமாட்டார்; புகை பிடிக்கமாட்டார்; மது அருந்தமாட்டார்.

கோடீஸ்வரரான பிறகும், வான்கோழியை ராக்பெல்லர் மறக்கவே இல்லை. 8000 ஏக்கர் நிலத்தில் வான்கோழிப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தினார். ஏராளமான வான்கோழிகளை அதில் வளர்த்துவந்தார். ஒரு காலத்தில் ஏழையாக இருந்து வான்கோழி வியாபாரம் செய்ததை நினைவுபடுத்திக் கொள்ளவே அவர் அவ்வாறு செய்தாராம்!



# அம்மா கொடுத்த அறை!



"பிள்ளைப் பருவமா! அப்படி ஒன்று அவனுக்கு இருப்பதாகவே தெரியவில்லையே! விவரம் தெரிந்த நாளிலிருந்து அவன் பெரிய மனிதன் போலவே எல்லாம் செய்து வருகிறான்" என்று அவனுடைய அப்பா ஒரு முறை கூறினார்.

அது உண்மைதான். அவன் மற்றப் பிள்ளைகளைப் போல் விளையாட மாட்டான்; தெருவில் அலையமாட்டான்; அரட்டை அடிக்க மாட்டான். எப்போதும், ஏதாவது ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பான். அல்லது, 'இது என்ன? அது என்ன? இதை ஏன் இப்படிச் செய்யவேண்டும்? அதை ஏன் அப்படிச்

செய்யக் கூடாது?' என்று பெரியவர்களிடம் கேள்வி மேல் கேள்வி போட்டுக் கொண்டிருப்பான்.

"என்ன, இந்த மாதிரி அர்த்தமில்லாத கேள்விகளை யெல்லாம் கேட்கிறானே! ஒரு வேளை...இவனுக்கு மூளைக் கோளாறாக இருக்குமோ!" என்று சிலர் சந்தேகப்பட்டனர். "இவன் தலை பெரிதாக இருக்கிறது. அதனால், மூளையில்தான் ஏதோ கோளாறு இருக்கவேண்டும்" என்று ஒரு டாக்டர்கூடக் கூறினார்!

மூளைக் கோளாறு உள்ள பையனை எப்படிப் பள்ளிக் கூடத்தில் சேர்ப்பது? எட்டு வயதுவரை அவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவே இல்லை. அப்புறம்தான் அவனைப் பள்ளியிலே சேர்த்தார்கள்.

பள்ளியில் மூன்று மாதங்களே படித்தான். பிறகு அவன் படித்ததெல்லாம் வீட்டிலேதான். அவன் அம்மா ஒரு காலத்தில் பள்ளி ஆசிரியையாக இருந்தவள். அவள் அவனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தாள்.

பத்தாவது வயதில் அவன் தன் வீட்டிலேயே ஒரு சோதனைச் சாலையை ஏற்படுத்தினான். அப்போது, அவன் கூடையை எடுத்துக் கொண்டு தெருத் தெருவாகச் செல்வான். கூடை நிறையப் புட்டிகளைச் சேகரித்துக் கொண்டு வருவான். இரசாயனப் பொருள்களை அவற்றிலே போட்டுவைப்பான். யாராவது அந்தப் புட்டிகளை எடுத்துவிட்டால், என்ன



செய்வது? அதற்காக, 'விஷம்' என்று துண்டுக் காகிதத்தில் எழுதி ஒவ்வொரு புட்டியின் மீதும் அதை ஒட்டிவைப்பான்! இப்படி அவனுடைய சோதனைச் சாலையில் 200க்கு மேற்பட்ட புட்டிகள் இருந்தன!

புதிது புதிதாகப் பல விஞ்ஞான உண்மைகளைக் கண்டுபிடிக்க வேண்டும், பெரிய விஞ்ஞானியாக வேண்டும் என்ற ஆசை அந்த வயதிலே அவனுக்கு இருந்தது. 'வானத்திலே பறவை பறக்கிறதே, அதேபோல் ஏன் மனிதனால் பறக்க முடியாது?' என்று அவன் அடிக்கடி தன்னைத் தானே கேட்டுக் கொள்வான்.

ஒரு நாள் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே இரசாயனப் பொருள்களில் சிலவற்றைக் கலந்தான்; நன்றாக அரைத்துத் தூள் ஆக்கினான். அந்தத் தூளை, அவர்கள் வீட்டு வேலைக்காரப் பையனான மைக்கேல் ஓட்ஸ் என்பவனிடம் கொடுத்து, "மைக்கேல், இதோ இந்தத் தூளை நீ உன் வாய்க்குள் போட்டு விழுங்கவேண்டும். சிறிது நேரத்தில் ஓர் அதிசயம் நடக்கும். நீ இருந்த இடத்தை விட்டு மெல்ல மெல்ல மேலே எழும்புவாய். அப்புறம், சிறிது நேரத்தில், 'விர்' ரென்று வானத்திலே பறக்க ஆரம்பித்து விடுவாய்...உம்...வாயைத் திற" என்றான்.

மைக்கேலுக்குப் பயமாயிருந்தது. "பயப்படாதே! முதல் முதலாக வானத்திலே பறந்தவன் யார் என்று கேட்டால், மைக்கேல் ஓட்ஸ்

என்று எல்லோரும் சொல்லுவார்கள். ஆம், அந்தப் பெருமை யாருக்குக் கிடைக்கும்? உம்...விழுங்கு" என்று கட்டாயப்படுத்தினான்.

மைக்கேல் அரைமனதாக அந்தத் தூளை வாய்க்குள்ளே போட்டு விழுங்கினான். சிறிது நேரம் சென்றது. மைக்கேல் மேலே எழும்பவும் இல்லை; வானத்தில் பறக்கவும் இல்லை. தடால் என்று கீழே சாய்ந்தான். தரையோடு தரையாய்ப் படுத்துவிட்டான். ஆமாம், மயங்கி விழுந்துவிட்டான்? அப்போது அவனுடைய அம்மா அங்கே வந்தாள்; நடந்ததை அறிந்தாள். அவளுக்கு மகன் மீது கோபம் கோபமாக வந்தது. அவன் கன்னத்தில் இரண்டு போட்டாள்; காதைப் பிடித்துத் திருகினாள். நல்ல வேளை; மைக்கேலின் உயிருக்கு ஒன்றும் ஆபத்து ஏற்படவில்லை.

சிறு வயதிலே இப்படியெல்லாம் சோதனை செய்து பார்த்துவந்த அவன், வளர்ந்து பெரியவனானதும், எத்தனை எத்தனையோ விஞ்ஞான அற்புதங்களைச் செய்து காட்டினான்.

மின்சார விளக்கில் படிக்கும்போது, திரைப் படத்தைப் பார்க்கும்போது, டெலிபோனில் பேசும் போது, கிராமபோனில் கேட்கும்போது, நாம் அவனுக்கு மறக்காமல் நன்றி செலுத்த வேண்டும்.

யாருக்கு?

**தாமஸ் ஆல்வா எடிசனுக்குத்தான்!**



# ஆறுவது வயதில் திருமணம்!



அது ஒரு சிறு கிராமம். அங்கே ஒரு சிவன் கோயில் உண்டு. அக்கோயிலில் ஆண்டுதோறும் மிகவும் சிறப்பாகத் திருவிழா நடைபெறும். சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து பெருங்கூட்டமாக மக்கள் வருவார்கள்.

அந்த ஆண்டும் வழக்கம்போல் திருவிழா நடந்து கொண்டிருந்தது. கோயிலின் முன்னால் ஒரு பெரியவர் கதாகாலட்சேபம் செய்து கொண்டிருந்தார். அங்கே நிறையக் கூட்டம் இருந்தது. அந்தக் கூட்டத்தில் மூன்று வயதுச் சிறுமி ஒருத்தியும், அவளுடைய அம்மா

வும் இருந்தார்கள். அவர்களைச் சுற்றி உறவினர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

அந்த உறவினர்களில் ஓர் அம்மாள் அந்தச் சிறுமியை ஆசையோடு தூக்கி மடியில் வைத்துக்கொண்டாள். விளையாட்டாக அவளுடன் பேசினாள். சிறுமியும் மழலை மொழியில் ஏதேதோ சொன்னாள். அப்போது அந்த அம்மாள் "பாப்பா, நீ யாரைக் கல்யாணம் பண்ணிக் கொள்வாய்?" என்று வேடிக்கையாகக் கேட்டாள்.

உடனே அச்சிறுமி சிறிது தூரத்தில் கதை கேட்டுக்கொண்டிருந்த ஒரு வாலிபனைச் சுட்டிக் காட்டி, "அதோ, அந்த மாமாவைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்" என்றாள்.

சிறுமி சொன்னதை அந்த அம்மாள் பக்கத்தில் இருந்த பெண்களிடம் சொன்னாள். உடனே எல்லாரும் 'கொல்'லென்று சிரித்தார்கள். மூன்று வயதுச் சிறுமி இருபது வயது வாலிபனைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னாளே, அதற்காக அவர்கள் சிரிக்கவில்லை. அந்த வாலிபனே பார்ப்பதற்குப் பைத்தியக்காரனைப் போலவே இருந்தான். 'இவ்வளவு பெரிய திருவிழாக் கூட்டத்தில் இப்படி ஒரு பைத்தியக்காரனைத் தேடிப் பிடித்தாளே!' என்றுதான் அவர்கள் சிரித்தார்கள்.



ஆனால், அதே வாலிபனுக்கும், அதே சிறுமிக்கும் மூன்று ஆண்டுகள் கழித்துத் திருமணம் நடக்கப் போகிறது என்பதை அன்று யாரும் அறியவில்லை. திருமணம் நடந்தபோது அச்சிறுமிக்கு வயது 6. அந்த வாலிபனுக்கு வயது 23.

"என்ன இது! ஆறு வயதுச் சிறுமிக்குக் கல்யாணமா?" என்று ஆச்சரியப்பட வேண்டாம். அந்தக் காலத்தில், பெண்களுக்கு ஆறு, ஏழு வயதிலும் பையன்களுக்குப் பத்து, பன்னிரண்டு வயதிலும் திருமணம் செய்வது வழக்கமாயிருந்தது. 'அப்படியானால், அந்த வாலிபனுக்கு ஏன் இருபது வயதுவரை திருமணம் ஆகவில்லை?" என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

அவனை 'அரைப் பைத்தியம்' என்றே பெரும்பாலோர் நினைத்தார்கள். ஆனால், உண்மையில் அவன் பைத்தியக்காரனல்ல. எப்போதும் அவன் கடவுளையே நினைத்துக் கொண்டிருப்பான். பக்திப் பாடல்களை வாய்க்குள்ளே பாடிக்கொண்டிருப்பான்; யாருடனும் அதிகமாகப் பேசமாட்டான். அவனைச் சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் 'பைத்தியம்' என்றே முடிவுகட்டி விட்டனர்.

பைத்தியத்துக்கு யாராவது பெண் கொடுப்பார்களா? 'பெண் கொடுக்கமாட்டோம்' என்று எல்லாரும் கூறிவிட்டார்கள்.

"நம்முடைய பிள்ளைக்கு எவருமே பெண் கொடுக்கமாட்டேன் என்கிறார்களே! எல்லோ ரும்அவனைப் பைத்தியம் என்று கேலி செய்கி றார்களே! இனி அவனுக்குக் கல்யாணமே ஆகாதோ?" என்று அவனுடைய அம்மா ஒரு நாள் மிகவும் கவலைப்பட்டாள். அப்போது அவன், "ஏனம்மா இப்படிப் பெண் தேடி அலைகிறீர்கள்! நேராக ஜயராம்பாடிக்குப் போங்கள். அங்கே இராமச்சந்திர முகர்ஜி என்று ஒருவர் இருக்கிறார். அவருக்கு ஒரு மகள் இருக்கிறாள். அங்கே போய்க் கேளுங் கள்" என்றான்.

மகன் இப்படிப் பேசியதைக் கேட்டதும், அம்மாவுக்கு வியப்பாக இருந்தது. அன்றே புறப்பட்டாள். மகன் சொன்ன வீட்டுக்குப் போனாள். பெண்ணின் அப்பா முதலில் இணங்கவில்லை. வெகு நேரம் பேசியபின் 'சரி' என்றார். ஒரு நல்ல நாளில் நல்ல வேளையில் திருமணம் நடைபெற்றது.

சிவன் கோயில் திருவிழாவில், "அதோ அந்த மாமாவைத்தான் கல்யாணம் பண்ணிக்குவேன்" என்றாளே, அதே சிறுமிதான் அந்த மணப் பெண்!

அவள் பெயர் சாரதா. மணமகன் பெயர் கதாதரன். கதாதரன் என்ற பெயரே பிற் காலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஆனது. சாரதா என்ற பெயரே ஸ்ரீ சாரதா மணி தேவியார் என்றாகிவிட்டது!



# சாமியார் சொன்ன அதிசயம்!



கும்பகோணத்திற்குப் பக்கத்திலே சூரிய மூலை என்று ஒரு கிராமம். அங்கே ஒரு சாமி யார் இருந்தார். அவர் இறக்கும்போது "ஆனந்த வருடத்திலே இங்கு ஓர் அதிசயம் நடக்கப்போகிறது. அதைப் பார்க்காமலே நான் போகிறேனே!" என்று கூறிக் கொண்டே உயிர் துறந்தாராம்.

அந்தச் சாமியார் சொன்ன அதிசயம் எது வாக இருக்கும் என்று ஒருவரை யொருவர் கேட்டுக் கொண்டார்கள். ஆனந்த வருடம் எப்போது பிறக்கும் என்று ஆவலாக எதிர் பார்த்தார்கள்; ஆனந்த வருடமும் பிறந்தது;

தமிழ் நாட்டில் அப்போதுதான் முதன் முதலாக ரயில் பாதை போடப்பட்டு ரயில் வண்டி ஓடத்தொடங்கியது. "ரயில் ஓடு வதைத்தான் அதிசயம் என்று சாமியார் சொல்லியிருக்க வேண்டும்" என்றார்கள் சிலர்.

அதே ஆண்டில்தான் தந்தி வசதியும் வந்தது. "இதுதான் பெரிய அதிசயம். இதைத்தான் சாமியார் சொல்லியிருக்க வேண் டும்" என்றார்கள் வேறு சிலர்.

அதே ஆண்டில்தான் அந்தக் கிராமத் தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தப் பையன் பிறந்த ஆண்டிலே அவனுடைய பெற்றோருக்குச் சொந்தமாக ஒரு வீடு கிடைத் தது. அதனால், அந்தப் பையன் பிறந்தது தான் அதிசயம் என்று அவனுடைய அம்மா நினைத்து நினைத்து மகிழ்ச்சி அடைந்தாள். இதைப் பெருமையாக எல்லோரிடமும் அடிக் கடி கூறுவாள்.

அந்தப் பையன் ஆரம்பத்திலே திண் ணைப் பள்ளிக்கூடத்திலே படித்தான். பிறகு பல புலவர்களிடம் தமிழ் கற்றான். வாலிபனா னதும் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவரிடம் பாடம் கேட்க ஆரம்பித் தான்.

மகா வித்துவானிடம் சென்றபோது, "உன் பெயர் என்ன?" என்று கேட்டார் அவர்.



"வேங்கடராமன்" என்று பதில் சொன் னான் வாலிபன்.

"வீட்டிலே உன்னை எப்படி அழைப் பார்கள்?"

"எனக்கு வைத்த பெயர் வேங்கடராமன். ஆனாலும், அது என்னுடைய முன்னோரின் பெயராக இருப்பதால், அந்தப் பெயரைச் சொல்லி என் அப்பா, அம்மா அழைக்கமாட் டார்கள். சாமிநாதன் என்றே அழைப்பார்கள். சாமா, சாமா என்றே செல்லமாகக் கூப்பிடு வார்கள்."

"சாமிநாதன் என்ற பெயரே நன்றாக இருக்கிறது. உன்னை இனி நான் சாமிநாதன் என்றே அழைப்பேன்" என்றார் மகாவித்து வான். அன்று முதல் அப்படியே அழைத்து வந்தார். அதே பெயர்தான் பிற்காலத்தில் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமி நாதய்யர் என்று நீண்டு விட்டது. ஆனாலும், "தமிழ்த் தாத்தா" என்று சொல்வதிலதான் நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி ஏற்படு கிறது.

தமிழ்த் தாத்தா அன்று சூரியமூலையில் பிறந்திராது போனால், சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு என்று சொல்லுகிறோமே, இந்த இலக்கியச் செல்வங்களெல்லாம் நமக்குக் கிடைக்காமலே போயிருக்கலாம்.


சூரிய மூலையிலே பிறந்த அவர், தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்றார். அங்கே கேட்பாரில்லாமல் கிடந்த ஏடுகளையெல்லாம் தேடிப் பிடித்தார். அவற்றைப் படித்துப் பார்த்தார். அவற்றிலே பல நல்ல நல்ல பாடல்களெல்லாம் இருந்தன.

முன் காலத்தில், அச்சடித்த புத்தகங்கள் இல்லை. ஆகையால், பனை ஓலையில்தான் பாடல்களை எழுதி ஒன்று சேர்த்துக் கட்டி வைப்பார்கள். அதுதான் அந்தக் காலத்தில் புத்தகம்!

அப்படி எழுதி வைத்த ஏட்டுச் சுவடிகளைப் பலர் அலட்சியமாக வீடுகளில் போட்டு வைத்திருந்தார்கள். அவற்றின் அருமை அவர்களுக்குத் தெரியவில்லை. ஆகையால், அவை கரையானுக்கு இரையாகிக் கொண்டிருந்தன. அவற்றையெல்லாம், நம் தமிழ்த் தாத்தா திரட்டினார்; ஆராய்ச்சி செய்தார். ஏட்டுச் சுவடிகளில் உள்ள எழுத்துக்களைப் படிப்பது மிகவும் சிரமம். ஆனாலும், அவர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. விடா முயற்சியுடன் அவற்றிலிருந்த பழைய பாடல்களையெல்லாம் படித்தார். பிறகு, அவற்றைப் புத்தகங்களாக அச்சிட்டு வெளியிட்டார். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இது ஒரு பெரிய அதிசயம் அல்லவா? இந்த அதிசயத்தைச் செய்தவர் ஆனந்த வருடத்திலே பிறந்ததும் ஓர் அதிசயம்தானே! சாமியார் வாக்குப் பலித்துவிட்டது!



# பச்சோந்திப் பரிசு!



கரிநாள், இராகு காலம், எமகண்டம் இவையெல்லாம் அபசகுனம் என்று நம்மிலே பலர் நினைக்கிறோமல்லவா? இதேபோல் வெள்ளைக்காரர்களிலும் சகுனம் பார்ப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

மாதங்களில் மே மாதம்.

தேதிகளில் பதின்மூன்றாம் தேதி.

கிழமைகளில் வெள்ளிக்கிழமை. இவையெல்லாம் அபசகுனம் என்று அவர்கள் கருதுகிறார்கள். இப்படியிருக்கும்போது மே மாதம்-அதிலும் 13-ஆம் தேதி வெள்ளைக்காரக் குடும்பத்திலே ஓர் ஆண் குழந்தை பிறந்த

தென்றால் அதனுடைய அப்பா அம்மாவுக்கு எப்படியிருக்கும்?

ஆனாலும் என்ன? அந்தக் குழந்தை பிறந்தவுடனேயே இறந்து விட்டதா? இல்லை. 75 ஆண்டுகள் உயிரோடு வாழ்ந்தது. சரி, அதைப் பெற்றவர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ ஏதாவது தீங்கு நேரிட்டதா? அதுவும் இல்லை; அந்தக் குழந்தையால் உலகத்துக்கே பெரிய நன்மை ஏற்பட்டது.

50-ஆண்டுகளுக்கு முன்பு மலேரியா நோயினால் ஆண்டுதோறும் லட்சக் கணக்கான மக்கள் அவதிப்பட்டு வந்தார்கள். ஆயிரக் கணக்கானவர்கள் செத்துக் கொண்டிருந்தார்கள். மிகப் பயங்கரமான இந்த வியாதியை வர விடாமல் தடுக்கவும், வந்தால் விரைவில் விரட்டி ஓட்டவும் வழி கண்டுபிடித்தது யார் தெரியுமா? மே மாதத்தில் 13-ஆம் தேதியில் பிறந்த அதே குழந்தைதான். ஆம், அது வெள்ளைக்காரக் குழந்தையாக இருந்தாலும், பிறந்தது நம் இந்தியாவில்தான். வட இந்தியாவில் உள்ள அல்மோரா நகரில் 1857-ஆம் ஆண்டு பிறந்தது. ஆராய்ச்சி செய்து வெற்றி கண்டதும் நம் தேசத்தில் தான்.

குழந்தையின் தகப்பனார் ஆங்கிலேயரின் படையில் தளபதியாக இருந்தார். அவருக்கு மொத்தம் பத்துக் குழந்தைகள். மூத்த குழந்தையின் பெயர் ரொனால்டு ராஸ் என்பதாகும்.



ராஸ் நான்கு வயதுப் பையனாக இருந்தபோது உடல் நலமில்லாமல் மிகவும் அவதிப்பட்டார். காய்ச்சலும் வயிற்றுப் போக்கும் அவரைப் படாத பாடு படுத்திவிட்டன. பிள்ளையை இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தால், உடல் தேறும் என்று அம்மா நினைத்தாள். மறு கப்பலிலே பிள்ளையை இங்கிலாந்துக்கு அனுப்பிவைத்தார்கள்.

ராஸ் பதினான்கு வயதுப் பையனாக இங்கிலாந்தில் இருந்தபோது அவருடைய மாமா அவருக்கு ஒரு பரிசு கொடுத்தார். அது என்ன பரிசு தெரியுமா? உயிருள்ள பச்சோந்திதான்! அந்தப் பச்சோந்தியை மிகவும் அன்பாக வளர்த்துவந்தார் ராஸ்.

அந்தப் பச்சோந்திக்குக் குளிர் மிகுதியாயிருந்தால் பிடிக்காது. எப்போதும் வெதுவெதுப்பான இடத்திலேயே அதை வைத்திருக்க அவர் நினைத்தார். தோட்டத்தின் நடுவிலே கண்ணாடி வீடு ஒன்றைக் கட்டினார். அதற்குள்ளே பச்சோந்தியை வளர்த்து வந்தார். அதனோடு சில செடி கொடிகளும் அந்தக் கண்ணாடி வீட்டுக்குள்ளே வளர்ந்து வந்தன. அவை எப்போதும் பச்சைப் பசேலென்று இருக்கும். ஆகையால் அதைப் 'பச்சை வீடு' என்றே எல்லோரும் சொல்வார்கள். தோட்டக்காரரும் ராஸும் சேர்ந்து தினமும் கண்ணாடி வீட்டின் வெளிப்புறத்தில்

கொதி நீரை ரப்பர்க் குழாய் மூலம் பாய்ச்சு வார்கள். இதனால் அந்த வீட்டுக்குள் எப்போதும் வெதுவெதுப்பாக இருக்கும். ஓந்தி கண்ணாடி வீட்டுக்குள் மகிழ்ச்சியோடு ஓடி ஆடித் திரியும்.

ஒருநாள் ராஸ் வெளியிலே போயிருந்தார். அப்போது தோட்டக்காரனுக்கு வேடிக்கையான ஓர் எண்ணம் தோன்றியது. "இந்தப் பச்சை ஓந்திமீது பச்சைத் தண்ணீரை ஊற்றினால் என்ன ஆகும்? அதையுந்தான் பார்க்கலாமே" என்று நினைத்தான். ஒரு வாளி நிறையக் குளிர்ச்சியான நீரை எடுத்து வந்தான். பச்சோந்தியின் தலையிலும் உடலிலும் மடமடவென்று ஊற்றினான். மறு விநாடி பச்சோந்தி குளிர் தாங்காமல் அதே இடத்தில் இறந்துவிட்டது.

சின்ன முதலாளியாகிய ராஸ் திரும்பி வந்தார். செத்துக் கிடந்த பச்சோந்தியைக் கண்டார். விவரம் அறிந்ததும் துடிதுடித்துக் கண்ணீர் விட்டார். அப்போது தோட்டக்காரன் மன்னிப்புக் கேட்டான். "அநியாயமாக என் தோழனைக் கொன்றுவிட்டாய்; உன்னை மன்னிக்கவே மாட்டேன்" என்று கதறினார்.

பச்சோந்தியின் உயிருக்காக அன்று கண்ணீர் விட்டவர், பிற்காலத்தில் பல்லாயிரக்கணக்கான உயிர்களை மலேரியாவிலிருந்து காப்பாற்றினார்!



# வீட்டிலே நடந்த நாடகம்



தாகூர் சிறுவராயிருந்தபோது, கல்கத்தாவில் ஒரு பெரிய பயில்வான் இருந்தார். 'கானா பயில்வான்' என்பது அவருடைய பெயர். அவரிடம் பலர் குத்துச் சண்டை கற்றுக் கொண்டார்கள்.

தாகூர் தினமும் பொழுது விடிவதற்கு முன்பே எழுந்து விடுவார்; குஸ்தி போடுவதற்கான லங்கோடு ஒன்றை அணிந்து கொள்வார்; கானா பயில்வானுடைய குஸ்திப் பள்ளிக்கூடத்திற்குக் கிளம்பி விடுவார்.

அங்கே தரையில் ஓர் அடி ஆழம் மண்ணைக் கிளறி மாவுபோல் வைத்திருப்பார்கள்.

அந்த மண்ணின் மீது கடுகு எண்ணெயை ஊற்றி இருப்பார்கள். அதுதான் குஸ்தி போடும் இடம். அந்த இடத்தில்தான் கானு பயில்வான் குத்துச் சண்டை கற்றுக் கொடுப்பார். அவருடன் தாகூர் சண்டை போடுவார். இருவரும் கட்டிப் புரளுவார்கள்; உருளுவார்கள். உடம்பெல்லாம் மண் ஒட்டிக் கொள்ளும். குஸ்தி வகுப்பு முடிந்ததும், தாகூர் உடம்பைத் தட்டிவிட்டுக்கொண்டு, வீடு திரும்புவார். ஆனாலும் தலையிலும், முதுகிலும் மண் ஒட்டிக் கொண்டிருக்கும்.

"இது என்ன விளையாட்டு? உடம்பெல்லாம் ஒரே மண்! இப்படித் தினமும் மண்ணைப் பூசிக்கொண்டு வந்தால், உன் சிவப்பு நிறம் மங்கிவிடாதா!" என்று தாகூரின் அம்மா கோபித்துக் கொள்ளுவாள்.

விடுமுறை நாட்களில் அவருடைய அம்மாதான் குளிப்பாட்டி விடுவாள். அப்போது அவள் ஒரு வாசனைத் திரவியத்தை மேலே தேய்ப்பாள். அரைத்த பாதாம் பருப்பு, பால், ஆரஞ்சுப் பழத்தோல் இன்னும் என்னென்ன வெல்லாமோ சேர்த்துத் தயார் செய்ததுதான் அந்த வாசனைத் திரவியம், இது எதற்காகத் தெரியுமா? தாகூரின் நிறம் மங்கிப் போகாமல் இருப்பதற்காகத்தான்.

தாகூரிடம் அம்மாவுக்குப் பிரியம் அதிகம். ஆனாலும், சின்ன வயதிலே நாடகம்



பார்க்க அவரை அனுமதிக்கவே மாட்டாள். "சிறுபிள்ளைகள் நாடகம் பார்த்தால் கெட்டுப் போய்விடுவார்கள்" என்று அம்மா நினைத்தாள். அம்மா மட்டுமா? அந்தக் காலத்திலிருந்த பெரியவர்கள் எல்லோருமே அப்படித்தான் நினைத்தார்கள்.

தாகூருக்குச் சிற்றப்பா ஒருவர் இருந்தார். அவர் நாடகம் எழுதுவார். நாடகங்களைத் தயார் செய்வார். நடிகர்களில் சிறுவர்களும் இருப்பார்கள். "சிறுவர்கள் நாடகத்தைப் பார்க்கக் கூடாதாம். ஆனால், நடிக்கலாமாம்" என்று தாகூர் குறைப்பட்டுக் கொள்வார்.

தாகூர் வீட்டில் அடிக்கடி நாடகம் நடக்கும். ஒருநாள், அவர்கள் வீட்டில் 'நளன் - தமயந்தி' நாடகம் நடைபெற இருந்தது. அந்த நாடகத்தைச் சிறுவர்களும் பார்க்கலாம் என்று பெரியவர்கள் அனுமதி கொடுத்துவிட்டார்கள். சிறுவர் தாகூருக்கு அளவில்லாத மகிழ்ச்சி.

"நாடகம் ஆரம்பிக்க வெகுநேரம் ஆகும். நீ படுக்கையில் படுத்துத் தூங்கு. நாடகம் ஆரம்பமானதும் உன்னை எழுப்புகிறேன்" என்றாள் அம்மா. தாகூர் முதலில் அம்மா பேச்சை நம்பவில்லை. ஆனாலும், அம்மா உறுதியாகச் சொன்னதால், 'சரி' என்று போய்ப் படுத்துவிட்டார்.

மணி அடித்தது. அப்போதுதான் நாடகம் ஆரம்பமானது. உடனே, ஒருவர் வந்து


தாகூரை எழுப்பினுர். தாகூர் கண்களைக் கசக்கிக் கொண்டு நாடகம் நடந்த இடத்திற்கு வந்தார். அப்போது எங்கு பார்த்தாலும் வர்ண விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அவருக்குக் கண்கள் கூசின. சுற்றிலும் பார்த்தார். பெரியவர்களும், சிறியவர்களுமாக அங்கே ஏராளமானவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

முன் வரிசையில் அண்ணன்களுடன் தாகூர் போய் உட்கார்ந்தார். அப்போது அவர் கையிலே ஒரு முடிச்சைக் கொடுத்தார்கள். அதில் ரூபாய்கள் இருந்தன. 'சபாஷ்' சொல்லும்போதெல்லாம் ஒவ்வொரு ரூபாயாக மேடையில் வீசவேண்டும் என்றுர்கள். அப்படியே தாகூர் வீசினுர். அந்தக் காலத்தில் பணக்காரர்கள், அந்த மாதிரிதான் ரூபாய்களை மேடையிலே வீசுவார்கள். நடிகர்கள் அந்த ரூபாய்களை எடுத்துக் கொள்வார்கள். இது அவர்களுக்கு மேல் வரும்படி!

சிறிய வயதிலே சிற்றப்பா எழுதிய நாடகத்தைப் பார்த்த தாகூர், பிறகு தாமே பல நாடகங்களை எழுதினுர். நாடகங்கள் மட்டுமா? கவிதைகள், கதைகள், கட்டுரைகள் எழுதினுர். அவை மூலமாக உலகப் புகழ் பெற்றுர். அவரது "கீதாஞ்சலி" என்ற கவிதை நூல் நோபல் பரிசு பெற்றதுதான் உங்களுக்குத் தெரியுமே! அவர் எழுதிய தேசீய கீதத்தை நாம் பாடாத நாள் உண்டா?



# பலிக்காத வாக்கு!



வகுப்பிலே சமஸ்க்ருதப் பாடம் நடந்து கொண்டிருந்தது. சமஸ்க்ருத ஆசிரியர் வாழ்க்கையைப் பற்றியும், ஆயுளைப்பற்றியும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அப்போது வகுப்பில் உட்கார்ந்திருந்த ஒரு மாணவனைச் சுட்டிக் காட்டி "இதோ இந்த விஸ்வேஸ்வரனைப் பாருங்கள். ஒல்லியாக நோஞ்சானுக இருக்கிருன். இப்படியே இருந்தால் 30 வயது முடிவதற்குள், இவன் ஆயுளே முடிந்துவிடும்" என்றுர்.

ஆனல் நல்லகாலம்; அந்த ஆசிரியரின் வாக்கு பலிக்கவில்லை. அந்த விஸ்வேஸ்வரன் 100 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்து அந்த

ஆசிரியரின் வாக்கைப் பொய்யாக்கி விட்டான். ஆனால், அவன் சாதாரண விஸ்வேஸ்வரனாக வாழவில்லை! இந்த உலகமே போற்றிப் புகழும் விஸ்வேஸ்வரனாக வாழ்ந்தான். இல்லாத போனால், அவரது நூற்றாண்டு விழாவை இந்தியா முழுவதும் கோலா கலமாகக் கொண்டாடி யிருப்போமா ?

டாக்டர் எம். **விஸ்வேஸ்வரய்யா** என்றால் "ஓ அவரைத் தெரியுமே! அவர் மிகப் பெரிய பொறிஇயல் நிபுணரல்லவா? மைசூர் திவானாயிருந்து மைசூர்ப் பல்கலைக் கழகம், மைசூர் பாங்க், கிருஷ்ண சாகர் அணைக்கட்டு, பத்ராவதி இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஆகியவற்றையெல்லாம் நிறுவியவரல்லவா? 'பாரத ரத்னா' பட்டம் பெற்றவரல்லவா?" என்றெல்லாம் புகழத் தொடங்கி விடுவீர்கள்!

சிறு வயதிலே விஸ்வேஸ்வரய்யா பாடங்களை ஒழுங்காகப் படிப்பார். ஆசிரியர்களிடம் மரியாதையாக நடந்து கொள்வார். சோம்பல் என்பதை அவரிடம் காணவே முடியாது. அவருடைய நல்ல குணங்களைக் கண்டு அவரிடம் மிகுந்த அன்பு காட்டினார், அவருடைய ஆசிரியர்களில் ஒருவர். நாதமுனி நாயுடு என்பது அவரது பெயர். அவர் விஸ்வேஸ்வரனைப் பார்த்து, "நீ தினமும் மாலை வேளையில் என் வீட்டிற்கு வா. நான் உனக்கு இலவசமாகப் பாடம் சொல்லித் தருகிறேன்" என்றார்.



விஸ்வேஸ்வரய்யாவின் அப்பாவோ மிகவும் ஏழை. ஏழைப்பிள்ளை சம்பளம் கொடுத்து வீட்டுப் பாடம் வைத்துக்கொள்ள முடியுமா? அந்த ஆசிரியரின் அன்பாலும் ஆதரவாலும் தினமும் மாலை வேளையில் அங்கே சென்று படித்து வருவார்.

கீழ் வகுப்பில் படிக்கும் போது அவர் ஆசிரியர் வீட்டுக்குப் போய்ப் பாடம் படித்து வந்தார். மேல் வகுப்புக்குச் சென்றபின் அவரிடம் சில மாணவர்கள் பாடம் படித்து வந்தார்கள். ஆம், ஏழையாக இருந்ததால் அவர் கல்லூரியில் படிக்கும்போது கீழ் வகுப்பு மாணவர் சிலருக்கு வீட்டுப் பாடம் சொல்லிக்கொடுத்து வந்தார். அதில் கிடைத்த வரும்படியைக் கொண்டுதான் அவரால் கல்லூரியில் படிக்கமுடிந்தது.

ஆரம்பப் பள்ளியில் நாதமுனி நாயுடு எவ்வளவு அன்பாக இருந்தார்! அதேபோல்; கல்லூரியில் படித்தபோது கல்லூரி முதல்வரான சார்லஸ் வாட்டர்ஸ் என்ற ஆங்கிலேயர் விஸ்வேஸ்வரய்யாவிடம் மிகவும் பிரியமாயிருந்தார். விஸ்வேஸ்வரய்யாவின் புத்தி நுட்பம், கடமை உணர்ச்சி, நல்லொழுக்கம் முதலியவற்றை அவர் அடிக்கடி பாராட்டுவார். ஒரு சமயம் அவர், 'விஸ்வேஸ்வரா, இதோ இந்த அகராதியை என் அன்பளிப்பாக ஏற்றுக்கொள். உனக்கு உதவியாயிருக்

கும்'', என்று கூறி 'வெப்ஸ்டர் அகராதி' ஒன்றைக் கொடுத்தார்.

வாட்டர்ஸ் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்ற பிறகும் விஸ்வேஸ்வரய்யா அவரை மறக்கவில்லை. பேரும் புகழும் பெற்ற பிறகு, இங்கிலாந்துக்கு அவர் அடிக்கடி செல்வதுண்டு. அப்போதெல்லாம் அவர் வாட்டர்ஸ் வீட்டுக்குப்போய் அவரைக் கண்டு தமது மரியாதையைத் தெரிவித்து வருவார்.


வாட்டர்ஸ் இறப்பதற்கு முன்பு தம்முடைய மனைவியை அருகிலே அழைத்தாராம். "நான் இறந்த பிறகு, நீ இந்தக் கைப்பொத்தான்களை எடுத்துக்கொண்டு இந்தியா செல்லவேண்டும். அங்குள்ள என் மாணவராகிய சர். விஸ்வேஸ்வரய்யாவிடம் என் நினைவாக இவற்றைச் சேர்ப்பிக்க வேண்டும்'' என்று கூறி, தங்கத்தால் ஆன ஒரு ஜோடி கைப் பொத்தான்களைக் கொடுத்தாராம்.

அவர் விரும்பியதுபோல், அந்த அம்மையார் இந்தியா வந்து விஸ்வேஸ்வரய்யாவிடம், அப்பொத்தான்களைக் கொடுத்தாராம். விஸ்வேஸ்வரய்யா கடைசி காலம்வரை அந்தப் பொத்தான்களைக் கண்ணேபோல் கருதிப் போற்றி வந்தார்.

மாணவரிடத்திலே ஆசிரியருக்கு எத்தகைய அன்பு! ஆசிரியரிடத்திலே மாணவருக்கு எத்தகைய பக்தி!



# மோட்டார் மன்னன்



தந்தையும், மகனும் தெருவிலே சென்று கொண்டிருந்தார்கள். அப்போது எதிரே ஒரு வண்டி மெதுவாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தது. அந்த வண்டியை மாடு இழுக்கவில்லை; குதிரையும் இழுக்கவில்லை. தானாகவே அது நகர்ந்து வந்தது. அதைப் பார்த்தான் அந்தச் சிறுவன். அவனுக்கு வியப்பாக இருந்தது.

உடனே, "அப்பா அப்பா! இது என்னப்பா தானாக வருகிறதே!'' என்றான். தந்தையும் வியப்புடன் அதைப் பார்த்துக் கொண்டு அங்கேயே அடித்துவைத்த சிலை போல் நின்றுவிட்டார்.

ஆனால் அந்தச் சிறுவன், அங்கேயே நிற்கவில்லை. வேகமாக அந்த வண்டியை நோக்கி ஓடினான். கையைக் காட்டி அந்த வண்டியை நிறுத்தினான். வண்டி நின்றதும், ஒரே தாவில் அந்த வண்டியில் அவன் ஏறினான். வண்டி ஓட்டியின் அருகிலே போய் நின்றுகொண்டு, "ஐயா, மன்னித்துக் கொள்ளுங்கள். இதற்குமுன் நான் இதுமாதிரி வண்டியைப் பார்த்ததே இல்லை. இது என்ன வண்டி? எப்படி இது தானாக ஓடுகிறது?" என்று ஆவலாகக் கேட்டான்.

வண்டி ஓட்டி அந்தச் சிறுவனை உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒருமுறை பார்த்தார். அப்போது அவனுக்குப் பன்னிரண்டு வயதுதான் இருக்கும். அவன் அவ்வளவு ஆர்வமாகக் கேள்வி கேட்டது வண்டி ஓட்டிக்கு வியப்பாக இருந்தது. உடனே அவர், "இங்கு ஒரு சாலை போடப் போகிறார்கள். அதற்காகத்தான் இதை ஓட்டிச் செல்கிறேன். இதன் பெயர் 'ரோடு—என்ஜின்'. நீராவியால் இது ஓடுகிறது" என்றார்.

சிறுவன் உடனே வண்டியிலிருந்த பல பகுதிகளையும் கூர்ந்து பார்த்தான். "எப்படி இது வேலை செய்கிறது? மணிக்கு எத்தனை மைல் போகும்?" என்று கேள்வி மேல் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான். வண்டி ஓட்டியும் பொறுமையாகப் பதில் கூறி



னார். எல்லா வற்றையும் அவன் கவனமாகக் கேட்டுக் கொண்டான்.

அன்றே அச் சிறுவனுக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. 'மனிதர்களை ஏற்றிச் செல்லக்கூடிய வண்டிகளைச் செய்ய வேண்டும். மிக வேகமாக அவை ஓடும்படி செய்ய வேண்டும்' என்பதுதான் அவனுடைய ஆசை. அடிக்கடி அதைப் பற்றியே அவன் நினைத்தான்.

பதின்மூன்றாவது வயதில் கடிகாரங்களைப் பழுதுபார்க்க அவன் கற்றுக் கொண்டான். எந்தக் கடிகாரத்தைக் கொடுத்தாலும், மிக எளிதாகப் பழுது பார்த்துவிடுவான். ஒரே ஆண்டில் 300 கடிகாரங்களை அவன் பழுது பார்த்திருக்கிறான்!

எல்லோரும் அவனுடைய திறமையைப் பாராட்டினார்கள். ஆனாலும், அவனுடைய அப்பாவுக்கு அவன் செய்கை பிடிக்கவில்லை. அவர் ஓர் உழவர். தன்னைப் போலவே தன் மகனும் ஓர் உழவனாக வேண்டும் என்றே விரும்பினார். ஆனாலும், என்ன செய்வது? மகனுடைய ஆசை அளவு மீறிப் போய் விட்டதே!

அவன் ஓர் எந்திரத் தொழிற்சாலையில் சேர்ந்தான். பகலிலே தொழிற்சாலையில் வேலை செய்வான். இரவிலே, வேகமாக ஓடும் வண்டியை எப்படிக் கண்டு பிடிப்பது என்று ஆராய்ச்சி செய்வான். பல நாள் முயன்றான்.

கடைசியில் அவன் முயற்சி வெற்றிபெற்றது. 1893ல் அவன் மோட்டார் வண்டியைக் கண்டு பிடித்தான். பிறகு சொந்தமாக ஒரு மோட்டார்க் கம்பெனியைத் தொடங்கினுன். ஆயிரக் கணக்கான மோட்டார்களைச் செய்தான். உலகம் எங்கும் அவன் மோட்டார்கள் சென்றன. நல்ல கிராக்கி ஏறபட்டது. லட்சம் லட்சமாக அவன் சம்பாதித்தான். ஏழை உழவனின் மகனுய்ப் பிறந்த அவன், உலகிலேயே மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவன் ஆனுன். 'மோட்டார் மன்னன்' என்று உலகமே அவனைப் புகழ்ந்தது.

அவன் ஏற்படுத்திய மோட்டார்க் கம்பெனியில் இப்போது 300 இலாகாக்கள் இருக்கின்றன. அந்தக் கம்பெனிக்குச் சொந்தமாகப் பல ரப்பர்த் தோட்டங்கள் உண்டு. பருத்தித் தோட்டங்கள் உண்டு. இவை மட்டுமா? இரும்புச் சுரங்கங்கள், நிலக்கரிச் சுரங்கங்கள் சாமான்களை ஏற்றிச் செல்லத் தனி ரயில் பாதைகள் எல்லாம் இருக்கின்றன!

அவன் கம்பெனியில் தயாரான மோட்டார் கார்கள் உலகப் புகழ் பெற்றன. 'போர்ட் மோட்டார்' என்ற பெயரைக் கேள்விப்பட்டிருப்பீர்களே! ஹென்றி போர்ட் என்ற அமெரிக்கச் சிறுவனின் விடாமுயற்சி வெற்றி பெற்றது என்பதையே அந்த மோட்டார் நமக்கு எடுத்துக் காட்டுகிறது!



# பறந்து காட்டினுன்!



விடுமுறை வந்துவிட்டால் போதும், அம்மாவும் மூன்று குழந்தைகளும் வீட்டை விட்டுப் புறப்பட்டுவிடுவார்கள். பகல் உணவைக் கையிலே எடுத்துக் கொள்வார்கள். ஆற்றங் கரைக்கோ அல்லது பக்கத்திலுள்ள காட்டுக்கோ போவார்கள். அங்கே பகல் முழுவதும் தங்கிவிட்டு, இரவுதான் வீடு திரும்புவார்கள்.

அந்த மூன்று குழந்தைகளிலே இருவர் ஆண்கள்; கடைக்குட்டி பெண்.

அவர்களுடைய அப்பா ஒரு மதகுரு. மதப் பிரசாரம் செய்வதற்காக அவர் அடிக்கடி வெளியூர் சென்றுவிடுவார். பெரும்பாலும்

வீட்டில் தங்கமாட்டார். விடுமுறை நாட்களில், அம்மாதான் அவர்களை வெளியிலே அழைத்துச் சென்று, இயற்கைக் காட்சிகளையெல்லாம் காட்டுவாள். ஆற்றங்கரையிலோ, காட்டிலோ தங்கியிருக்கும்போது, அம்மா அவர்களுக்கு இனிக்க இனிக்கக் கதைகள் சொல்லுவாள். ஏதேனும் ஒரு பறவையின் குரல் கேட்டால், உடனே, "இது எந்தப் பறவையின் குரல்? சொல்லுங்கள், பார்க்கலாம்" என்பாள். சரியாக ஒரு குழந்தை சொல்லி விட்டால், உடனே அந்தக் குழந்தையைத் தட்டிக் கொடுப்பாள்; கட்டிப் பிடித்து முத்தம் கொடுப்பாள்.

யாருக்குமே தெரியாத போனால், "அந்தப் பறவை இந்தப் பக்கமாக வரும். வரும்போது காட்டுகிறேன்" என்பாள். அவ்வாறே அந்தப் பறவை அந்தப் பக்கம் வரும்போது காட்டுவாள். இதனால், எல்லாப் பறவைகளையும் அவர்கள் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்கள். அவற்றின் குரல்களையும் எளிதில் கண்டு கொள்வார்கள்.

ஒருநாள், ஆண் குழந்தைகள் இருவரும் ஆற்றங்கரையிலே மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அம்மாவும் அருகிலே இருந்தாள். தூண்டிலில் வெகு நேரம் வரை மீன் விழவில்லை. பொறுமையாக அவர்கள் காத்திருந்தார்கள். அப்போது, ஒரு



பெரிய பறவை பறந்துவந்தது. அது 'லபக்' கென்று தண்ணீருக்குள் பாய்ந்தது. தன் அலகினால், ஒரு மீனைக் கொத்திக்கொண்டு மேலே பறந்து சென்றது.

அதைப் பார்த்தான் மூத்த பையன். உடனே அம்மாவிடம், "அம்மா, அம்மா, பார்த்தாயா? கண் மூடிக் கண் திறப்பதற்குள் அந்தப் பறவை மீனைத் தூக்கிக்கொண்டு பறந்து விட்டது! எப்படி அம்மா அந்தப் பறவையால் நினைத்தபடி பறக்க முடிகிறது?" என்று கேட்டான்.

"சிறகுகளினால்தான் அது பறக்கிறது. அதன் சிறகுகள் அசைவதைப் பார்த்தாயா?" என்றாள் அம்மா.

"அது சரி. ஆனால், கீழே இறங்கும்போது சிறகுகள் அசையவே இல்லையே!"

அம்மா அதற்குப் பதில் சொல்ல முயன்றாள். சிறுவனுக்கு அது அவ்வளவு திருப்தி அளிக்கவில்லை.

"அம்மா, நமக்கும் சிறகு இருந்தால்......? பறவையைப் போல வானத்திலே பறக்கலாம் அல்லவா?"

"பறக்கலாம். ஆனால், ஆண்டவன் நமக்குச் சிறகுகளைப் படைக்கவில்லையே!"

"ஆண்டவன் படைக்காது போனால் என்ன? நாமே சிறகுகள் செய்து கொள்ள முடியாதா?"

"முடியுமோ, என்னவோ, எனக்குத் தெரியாதப்பா. யாரும் சிறகு கட்டிக்கொண்டு பறந்ததாகத் தெரியவில்லை."

"அப்படியானால், நான் பறந்து காட்டுகிறேன். என்றாவது ஒரு நாள் பறந்து காட்டுவேன்."

"அண்ணா கூடவே நானும் பறப்பேன்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான் அருகிலே இருந்த தம்பி.

"சரி, இப்போது பறந்து விடாதீர்கள். கொஞ்சம் வயதாகட்டும்" என்றாள் தாய் சிரித்துக்கொண்டே.

'நம் பிள்ளைகள் கெட்டிக்காரப் பிள்ளைகள் தான்' என்று மனத்திற்குள்ளே சொல்லிக் கொண்டாள். பிற்காலத்தில் அவர்களைக் கெட்டிக்காரர்கள் என்று இந்த உலகமே மனம் விட்டுப் பாராட்டத் தொடங்கி விட்டது.

சிறிய வயதிலே, வானத்தில் பறக்கவேண்டும் என்று ஆசைப்பட்ட அச்சிறுவன் பெயர் வில்பர் ரைட்; அவன் தம்பி பெயர் ஆர்வில் ரைட். 1903 ஆம் ஆண்டில் பறக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்து வானத்திலே பறக்க விட்டவர்கள் அவர்கள்தான். ரைட் சகோதரர்கள் என்னும் அவர்களது விடாமுயற்சியால்தான் இன்று விமானம் பறப்பதை நாம் பார்க்கின்றோம்.



# மூன்றாவது பெண்



ராஜ்கோட் நகரில் திவானாக ஒருவர் இருந்தார். அவருக்கு ஒரு மகன் இருந்தான். அவனுக்கு ஏழு வயதிருக்கும். அதே ஊரில் ஒரு வியாபாரி இருந்தார். அவர் பெயர் கோகுல்தாஸ் மகன்ஜி. அவருக்கு ஒரு மகள் இருந்தாள். அவளுக்கும் கிட்டத்தட்ட அந்தப் பையனின் வயதுதான். வியாபாரியும் திவானும் நெருங்கிய நண்பர்கள். அவர்கள் தங்களுடைய நட்பை மேலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார்கள். அதற்கென்று ஒரு திட்டம் போட்டார்கள். அது என்ன திட்டம்?

வியாபாரியின் மகளுக்கும், திவானுடைய மகனுக்கும் சில ஆண்டுகளில் திருமணம்

செய்துவைப்பது என்பதுதான் அவர்கள் போட்ட திட்டம். அப்போது அந்தப் பெண்ணும் பையனும் ஏழு வயதுச்சிறுவராக இருந்தார்கள்.

அப்போதே நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது. ஒரு பையனுக்கும், ஒரு பெண்ணுக்கும் கல்யாணம் செய்வதென்று, அந்த இரு வரது பெற்றோர்களும் முதலிலே நிச்சயம் செய்து கொள்வதைத்தான் நிச்சயதார்த்தம் என்கிறார்கள்.

அதற்கு முன்பே அந்தப் பையனுக்கு இரண்டு தடவைகள் நிச்சயதார்த்தம் ஆகியிருந்தது. முதலில் ஒரு பெண்ணை நிச்சயம் செய்தார்கள். ஆனால், அவள் சில நாட்களிலே இறந்துவிட்டாள். பிறகு மற்றொரு பெண்ணை நிச்சயம் செய்தார்கள். அவளும் இறந்து போனாள். நல்லவேளையாக, மூன்றாவதாக நிச்சயம் செய்யப்பட்ட அந்த வியாபாரியின் மகளுக்கு எவ்விதமான ஆபத்தும் ஏற்படவில்லை!

நிச்சயதார்த்தம் செய்து ஆறு ஆண்டுகள் ஆயின. அப்போது அந்தப் பெண்ணுக்கு வயது பதின்மூன்று. பையனுக்கும் அதே வயதுதானே! அந்த வயதில் இருவருக்கும் திருமணம் நடந்தது. திருமணம் என்றால் என்ன என்பது அந்தப் பெண்ணுக்கும் தெரியாது; பையனுக்கும் தெரியாது. 'பட்டுச் சேலை கட்டலாம்; பளபளக்கும் நகைகள்



அணியலாம்' என்றுதான் அந்தப் பெண் நினைத்தாள்.

திருமணத்தன்று மாப்பிள்ளைப் பையன் புதுச் சரிகை வேட்டி கட்டி, சரிகைத் தொப்பி அணிந்திருந்தான். சின்னப் பல்லக்கிலே அவனை உட்கார வைத்து, பெண் வீட்டை நோக்கி மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்து வந்தார்கள். இந்தக் காட்சியைப் பார்ப்பதற்கு வீட்டிற்குள் இருந்தவர்களெல்லாம் வெளியிலே ஓடிவந்தார்கள். தெருவிலே சென்றவர்களெல்லாம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

கல்யாணப் பெண்ணுக்கும் இந்த வேடிக்கையைப் பார்க்கவேண்டும் என்று ஆசை. பெரியவர்களுக்குத் தெரியாமல் அவள் பூனை போல் வாசலுக்கு வந்தாள். ஓரமாக நின்று கொண்டு, ஊர்வலத்தை எட்டி எட்டிப் பார்த்தாள். ஆனாலும், சிறிது நேரம்கூட அவளை அங்கு நிற்க விடவில்லை; பிடித்து உள்ளே இழுத்துச் சென்று, மணமேடையில் உட்கார வைத்து விட்டார்கள்.

திருமணம் ஆனபிறகு, "நம்முடன் விளையாடுவதற்கு ஒரு தோழன் கிடைத்தான்!" என்று அந்தச் சிறுமி நினைத்தாள். அந்தப் பையனும் அப்படித்தான் நினைத்தான்.

அந்தப் பெண்ணுக்கு, எழுதப் படிக்கத் தெரியாது.படிக்காத பெண்ணாக இருந்தாலும்,

அவள் நல்ல பண்பு உள்ள பெண்ணாக இருந்தாள்.

'இவள் படித்தவளாகவும் இருந்தால், இன்னும் எவ்வளவு நன்றாக இருக்கும்?' என்று அந்தப் பையன் நினைத்தான். அவளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுக்க ஆசைப்பட்டான்; ஆனால், பெற்றோர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம். அதனால், இரவு நேரங்களில் யாருக்கும் தெரியாமல் பாடம் சொல்லிக் கொடுத்து வந்தான்.

அவள் பல நாட்கள் இராப் பாடம் படித்தாள். கடிதம் எழுதவும் எளிய நடைப் புத்தகங்களைப் படிக்கவும் ஓரளவு கற்றுக்கொண்டாள்.


அவள் பெரியவளானாள். பத்திரிகைகள் படிக்கத் தெரிந்து கொண்டாள். பாட்டியானாள். பகவத் கீதையைப் பக்தியோடு படிக்கத் தொடங்கினாள். பாராமல் ஒப்புவிக்கவும் அவளுக்குத் தெரிந்தது!

பாட்டியான பிறகும், எல்லாரும் அவளை 'அன்னை' என்றே அன்போடு அழைத்து வந்தார்கள். 'பா' என்றாலே அன்னை என்றுதான் பொருள்.

இந்தியர் அனைவருக்கும் அன்புள்ள அன்னையாக விளங்கிய 'கஸ்தூரி பா'தான் 13-வது வயதிலே மணப் பெண் ஆனவர்! மாப்பிள்ளையானவர் யார் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?



# வயிற்றிலே ஆடு!



திருடன்.

பிசாசு.

பாம்பு.

இந்தப் பெயர்களில் எதைச் சொன்னாலும் போதும்; மோகன் நடுநடுங்குவான். இரவில் வீட்டைவிட்டு வெளியில் வரவே மாட்டான். அறையில் இரவு முழுவதும் விளக்கு எரிந்துகொண்டே இருக்கவேண்டும்; அப்போதுதான் அவனுக்குத் தூக்கம் வரும்.

மோகனுடைய அண்ணனுக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் சில நாட்களில் மோகனுக்கும் நண்பன் ஆகிவிட்டான். அவன் நல்ல பலசாலி; தைரிய முள்ளவன்.

ஒருநாள் அந்த நண்பன், மோகனைப் பார்த்துக் கூறினான்: "மோகன், உன்னைப் பார்க்கவே பரிதாபமா யிருக்கிறது. இவ்வளவு கோழையாக இருக்கிறாயே! இப்படி நோஞ்சானாக இருக்கிறாயே! என்னைப் பார்; என் உடம்பைப் பார். நான் எவ்வளவு பலசாலியாக இருக்கிறேன்! விளையாட்டுக்களில் எவ்வளவு கெட்டிக்காரனாக இருக்கிறேன்! இதற்கெல்லாம் என்ன காரணம், தெரியுமா? நான் மாமிசம் சாப்பிடுகிறேன்!

"நீ ஆங்கிலேயர்களைப் பார்த்திருப்பாயே, அவர்கள் எப்படி இருக்கிறார்கள்? 'கொழு கொழு' என்று இருக்கிறார்கள்! நம்மையெல்லாம் அடக்கி ஆளுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன தெரியுமா? அவர்கள் மாமிசம் சாப்பிடுகிறார்கள்! அவர்களைப் போல் நாமும் மாமிசம் சாப்பிடவேண்டும். அப்போதுதான் பலசாலி ஆகமுடியும். அவர்களை நம் நாட்டை விட்டு விரட்டியடிக்க முடியும்; விரைவிலே சுதந்திரம் பெற முடியும். மாமிசம் சாப்பிடுவதில் உள்ள நன்மை, சொன்னால் புரியாது. சாப்பிட்டுப் பார்த்தால்தான் உனக்குத் தெரியும்."

மோகனுக்குப் பலசாலியாக வேண்டும், பயமில்லாமல் இருக்கவேண்டும் என்ற ஆசை இருந்தாலும், மாமிசம் சாப்பிட மனம் இடம் கொடுக்கவில்லை.



ஆனாலும், அந்த நண்பன் விடவில்லை. திரும்பத் திரும்ப மாமிசத்தின் மகிமையை எடுத்துக் கூறிவந்தான். கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். அதே போல், மோகனுடைய மனம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிவிட்டது.

ஆனால், மாமிசத்தை எங்கு வைத்துச் சாப்பிடுவது? யாராவது பார்த்துவிட்டால்...? அம்மா அப்பாவுக்குத் தெரிந்து போனால்...? அவனுக்குப் பயமாகவே இருந்தது.

ஆனால், அந்த நண்பன், "மோகன், வீணாகப் பயப்படாதே. நாம் இருவரும் ஆற்றங்கரைக்குப் போவோம். எவரும் வராத இடத்தில் உட்கார்ந்து மாமிசம் சாப்பிடுவோம். மனத்தைத் திடப்படுத்திக் கொள்" என்று தைரியம் கூறினான்.

அவன் சொன்னபடியே இருவரும் ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். மறைவான ஓரிடத்தில் உட்கார்ந்தார்கள். காகிதத்தில் மடித்து வைத்திருந்த ஆட்டு மாமிசததை நண்பன் வெளியே எடுத்தான். மோகனிடம் கொடுத்தான். மோகன் அதை வாயின் அருகிலே கொண்டுபோகத் தயங்கினான்.

"உம், என்ன தயக்கம்? சாப்பிடு" என்றான் நண்பன்.

மோகன் கண்களை நன்றாக மூடிக்கொண்டான். கசப்பு மருந்து சாப்பிடுவதுபோல் வேண்டா வெறுப்புடன் மாமிசத்துண்டை

வாய்க்குள்ளே போட்டான். அப்போது அவன் உடல் நடுநடுங்கியது. வியர்வை கொட்டியது. அதற்குமேல் அவனால் அங்கு இருக்க முடியவில்லை. எழுந்து வீடு வந்து சேர்ந்தான்.

அன்று இரவு முழுவதும் மோகனுக்குத் தூக்கம் வரவில்லை. கண்களை மூடினால் போதும்; வயிற்றுக்குள்ளே ஓர் ஆடு வந்து நிற்பதுபோல் இருக்கும். அது சும்மா நிற்காது. 'மே, மே' என்று கதறும்! அப்போது மோகனின் உள்ளம் படாதபாடு படும். "பரம சாதுவான ஆட்டைக் கொன்று தின்பதா? சே, இனி உயிருள்ளவரை மாமிசத்தைத் தொடமாட்டேன்" என்று அப்போது அவன் உறுதி எடுத்துக்கொண்டான்.

சாகும்வரை அவன் எந்த உயிரையும் கொன்று தின்றதில்லை. அது மட்டுமா? எந்த உயிருக்கும் தீங்கு செய்ததும் இல்லை; தீங்கு நினைத்ததும் இல்லை.

மாமிசம் சாப்பிட்டால்தான் ஆங்கிலேயரை விரட்ட முடியும், சுதந்திரம் பெற முடியும் என்று சொன்னானல்லவா அந்த நண்பன்? ஆனால், மாமிசம் சாப்பிடாமலே, அன்பு வழியில் ஆங்கிலேயரிடமிருந்து நமக்கு விடுதலை வாங்கித் தந்தான் அந்த மோகன்!

அந்த மோகன் யார் என்பது உங்களுக்கா தெரியாது!

நம் தேசத் தந்தை **மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியேதான்!**



# பறவைக்கு விடுதலை!



அண்ணன் பெயர் விளாதிமிர்.

தங்கை பெயர் ஒல்யா.

இருவரும் எப்பொழுதும் ஒன்றாகவே விளையாடுவார்கள். தோட்டத்தில் அண்ணன் ஓடுவான்; தங்கை அவனைத் துரத்துவாள். மரத்தின்மீது அவன் விறுவிறு என்று ஏறுவான். அவளும் தட்டுத் தடுமாறி எப்படியோ ஏற முயலுவாள். அவன் கிளைவழியாக நடந்து சென்று, தொப்பென்று கீழே குதிப்பான். அவள் மரத்தை விட்டு இறங்கி மீண்டும் துரத்துவாள்.

இப்படியே இருவரும் ஓடிப் பிடிக்கும் விளையாட்டில் மும்முரமாக ஈடுபடுவார்கள்.

தோட்டத்தில் மட்டுமல்ல; வீட்டுக்குள்ளேயும் அவர்கள் இப்படி விளையாடுவார்கள். அப்பொழுது அவாகள் பலமாகக கூச்சல் போடுவார்கள். "ஏன் இப்படிக் கூச்சல் போடுகிறீர்கள்?" என்று சில சமயங்களில் அம்மா கோபித்துக் கொள்வாள். அம்மாவுக்கு எவ்வளவுதான் கோபம் வந்தாலும், குழந்தைகளை அடிக்கவே மாட்டாள். கோபம் அதிகமாக வந்துவிட்டால், அவள் என்ன செய்வாள், தெரியுமா?

அப்பாவின் அறையிலே கைபிடியுடன் கூடிய ஒரு கறுப்பு நாற்காலி இருக்கும். எந்தக் குழந்தையாவது தவறு செய்தால், அந்தக் குழந்தையை அந்தக் கறுப்பு நாற்காலியில் அம்மா உட்கார வைத்துவிடுவாள். "எங்கும் போகக்கூடாது. இங்கேயே உட்கார்ந்திருக்கவேண்டும். நான் போகச் சொன்னுல் தான் போகலாம்" என்று கண்டிப்பாக உத்தரவு போட்டுவிடுவாள். குழந்தைகளை நாற்காலியுடன் சேர்த்துக் கயிற்றுல் கட்டிவைக்க மாட்டாள். ஆனுலும், கட்டிவைத்தது போல் அவர்கள் ஆடாமல் அசையாமல் நாற்காலியில் உட்கார்ந்திருப்பார்கள்.

சிறிது நேரம் சென்றதும், அம்மா நாற்காலியின் அருகிலே வருவாள். "என் கண்ணல்லவா? நீ தப்பு செய்யலாமா? இனி செய்யக்கூடாது. போய் விளையாடு" என்பாள்.



ஒருநாள் விளாதிமிர் ஏதோ ஒரு சிறு தவறு செய்துவிட்டான். அதனுல், அம்மா அவனைக் கறுப்பு நாற்காலியில் உட்காரவைத்தாள். வழக்கம்போல் சிறிது நேரத்தில் தனக்கு விடுதலை கிடைத்துவிடும் என்றே அவன் நினைத்தான். ஆனுல், இரண்டு மூன்று மணி நேரமாகியும் அம்மா வரவில்லை. அப்படியே நாற்காலியில் சாய்ந்து தூங்கிவிட்டான். வேலை மும்முரத்தில் அவன் நாற்காலியில் இருப்பதை அம்மா மறந்துவிட்டாள்.

வெகு நேரம் சென்ற பிறகே, "அடடே, பிள்ளையை எவ்வளவு நேரம் உட்கார வைத்துவிட்டோம்!" என்று நினைத்தாள். உடனே கறுப்பு நாற்காலியை நோக்கி ஓடினுள். விளாதிமிர் சுகமாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவனைக் கீழே இறக்கிக் கட்டிலில் படுக்கப் போட்டாள்.

ஒரு சமயம் விளாதிமிர் ஒரு மைனுவைப் பிடித்து வந்து கூட்டிலே அடைத்து வளர்த்துவந்தான். ஆனுல், அந்த மைனு அதிகநாள் உயிரோடு இருக்கவில்லை. உடல் மெலிந்து, உரோமம் உதிர்ந்து விரைவிலே இறந்துவிட்டது. இறந்துபோன மைனுவைக் கண்டதும், அவன் கண்கள் கலங்கின. "சுதந்திரமாகப் பறந்து திரிந்த பறவையைக் கூட்டிலே அடைத்துக் கொடுமைப் படுத்தினேன். கூட்டைவிட்டுப் போக முடியவில்லை. அதனுல் இந்த உலகத்தை விட்டே போய்விட்

டதே !" என்று முணுமுணுத்தான். அதே சமயம் அவன்,"இனி நான் எந்தப் பறவையையும் கூண்டில் அடைக்கமாட்டேன்" என்று உறுதி எடுத்துக்கொண்டான்.

அந்த நாளில் வசந்த காலம் வந்தால், கூண்டுப் பறவைகளுக்கெல்லாம் விடுதலை கிடைக்கும். பறவை வளர்ப்பவர்கள் கூண்டுகளைத் திறந்து பறவைகளைப் பறக்க விடுவார்கள்.

விளாதிமிர்தான் பறவைகளைக் கூண்டில் அடைப்பதில்லையே! அதனால் அவன் அம்மாவிடம் காசு வாங்கி அந்தக் காசில் பறவை வியாபாரியிடமிருந்து ஒரு பறவையை வாங்குவான். வாங்கியவுடனே, அதைத் தூக்கி மேலே எறிவான். அது சிறகடித்துப் பறந்து செல்லும்.அதைப் பார்த்துப் பார்த்து அவன் ஆனந்தக் கூத்தாடுவான்.

அன்று பறவைக்கு விடுதலை வாங்கிக் கொடுத்த விளாதிமிர், பிற்காலத்தில் மக்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்க நினைத்தான். அதற்காக அரும்பாடுபட்டான். பெரும் புரட்சியை 50 ஆண்டுகளுக்கு முன்பு, முன்னின்று நடத்தினன்.

புதிய ரஷ்யாவை—இன்றுள்ள சோவியத் நாட்டை நிறுவிய **லெனின்** அவர்களின் இளமைப் பெயர்தான் விளாதிமிர் என்பது!



# ஏழு வயதில் இங்கிலாந்து சென்றவர் !



ஏழு வயதுச் சிறுவரா யிருந்தபோதே இங்கிலாந்து சென்றவர் **அரவிந்தர் !**

அரவிந்தருடைய அப்பா ஒரு பெரிய டாக்டர். டாக்டர் கிருஷ்ணதன் கோஷ் என்பது அவரது பெயர். இங்கிலாந்தில் மேல் படிப்புப் படித்தவர். ஆங்கிலேயருடைய பழக்க வழக்கங்களும், நடை உடை பாவனைகளும் அவருக்கு மிகவும் பிடிக்கும்.

ஆகையால், அவர் தம்முடைய மூன்று பிள்ளைகளையும் ஆங்கில அதிகாரிகள் படிக்கும் பள்ளியிலே சேர்த்தார். வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு வெள்ளைக்கார அம்

மையாரையும் ஏற்பாடு செய்தார். அந்த அம்மையார் ஆங்கில மொழியையும், ஆங்கிலேயரின் பழக்க வழக்கங்களையும் அந்தப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

இப்படியிருந்தும் டாக்டர் கோஷுக்குத் திருப்தி ஏற்படவில்லை...“என்ன இருந்தாலும் இங்கிலாந்தில் படிப்பது போல் ஆகுமா ...?” என்று அவர் அடிக்கடி நினைப்பார்.

அவருக்கு ஒரு வெள்ளைக்கார நீதிபதியைத் தெரியும். அந்த நீதிபதியிடம் தம் முடைய ஆசையை வெளியிட்டார். உடனே அந்த நீதிபதி, “பிள்ளைகள் படிப்பைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். என் உறவினர் ஒருவர் மாஞ்செஸ்டர் நகரில் பாதிரியாக இருக்கிறார். அவர் வீட்டில் உங்களுடைய மூன்று பிள்ளைகளும் தங்கிப் படிக்கலாம்.” என்றார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அவரே செய்தார்.

மூன்று பிள்ளைகளையும் இங்கிலாந்துக்குத் தனியாக அனுப்பலாமா?

டாக்டர் கோஷும், அவருடைய மனைவியும் பிள்ளைகளோடு இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்கள். மாஞ்செஸ்டர் நகரை அடைந்தார்கள். அங்கே, பாதிரியாரிடம் குழந்தைகளை ஒப்படைத்தார்கள். சில நாட்களில், பிள்ளைகளை அங்கே விட்டுவிட்டு, இந்தியாவுக்குத் திரும்பினார்கள்.



சின்ன வயதிலே, அரவிந்தர் நிறைய நிறைய ஆங்கிலப் புத்தகங்கள் படிப்பார். ஆங்கிலக் கவிதைகளைப் படிப்பதில், அவருக்கு ஒரு தனி விருப்பம். கவிதைகளைப் படிப்பதோடு அவர் நிற்கவில்லை; சொந்தமாகக் கவிதைகள் எழுதவும் ஆரம்பித்தார்.

இங்கிலாந்தில் இருந்தபோது, அரவிந்தரை எப்படியாவது கிறிஸ்தவ மதத்தில் சேர்த்து விடவேண்டும் என்று அந்தப் பாதிரியாரின் தாயார் முயற்சி செய்தாள். ஆனால், பாதிரியார் அதற்கு இடம் கொடுக்கவில்லை.

பத்து வயதுப் பையனாயிருந்தபோது அரவிந்தரை ஒரு நாள் மாதா கோயிலுக்கு அழைத்துச் சென்றிருந்தார்கள். மாதா கோயிலில் ஏராளமான கூட்டம். எல்லோரும் விதம் விதமான உடைகள் உடுத்திப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தில் பிரார்த்தனை முடிந்தது. கூட்டமும் கலைந்தது. ஆனாலும், சிலர் மட்டும் அங்கேயே தங்கியிருந்தார்கள். அவர்கள் பிற மதத்தைச் சேர்ந்தவர்கள். கிறிஸ்தவ மதத்தில் சேருவதற்காகவே வந்திருந்தார்கள். அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார் அரவிந்தர்.

அப்போது மதகுரு அரவிந்தரைப் பார்த்துச் சில கேள்விகள் கேட்டார். அரவிந்தர் பதில் எதுவும் கூறவில்லை. மௌனமாகவே நின்றார்.

அப்போது, அங்கே கூடியிருந்தவர்கள், "இவன் காப்பாற்றப்பட்டான்.", "இவன் காப்பாற்றப்பட்டான்" என்று சத்தம் போட்டார்கள். பிறகு, எல்லோரும் மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்தார்கள். அரவிந்தரையும் அவ்வாறே பிரார்த்தனை செய்யும்படி சொன்னார்கள். அரவிந்தருக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனாலும், அவர் சும்மா இருக்கவில்லை; வாய்க்குள் ஏதோ முணுமுணுத்தார்.


அரவிந்தர் அப்போது கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து விட்டதாகவே எல்லோரும் பேசிக் கொண்டார்கள். ஆனால், கிறிஸ்தவ மதம் என்றால் என்ன என்பதுகூட அந்த வயதில் அரவிந்தருக்குத் தெரியாது.

ஆனால், வளர்ந்து பெரியவரானதும் அவருக்குத் தெரியாத மதமே இல்லை. எல்லா மதங்களிலும் உள்ள உண்மைகளை உணர்ந்தார். எல்லா மதங்களையும் மதித்தார். பெரிய யோகியானார். பல புத்தகங்களை எழுதினார். புதுச்சேரியில் ஓர் ஆசிரமம் அமைத்தார். அதுதான் அரவிந்த ஆசிரமம்.

அந்த ஆசிரமத்தில் சாதி வேற்றுமை கிடையாது; மதவேற்றுமை கிடையாது; இன வேற்றுமை கிடையாது. எல்லா தேசத்தவரும் எல்லா மொழியினரும் அங்கே ஒன்றாக வசித்து வருகிறார்கள்; ஒன்று கூடிப் பிரார்த்தனை செய்கிறார்கள்!



# அஞ்சா நெஞ்சன்



பள்ளி மாணவர்கள் சுற்றிலும் வட்டமாக உட்கார்ந்திருக்கிறார்கள். நடுவிலே ஒரு கையில் பளபளக்கும் வாளுடனும், மற்றொரு கையில் ஆப்பிள் பழத்துடனும் ஒருவர் நின்று கொண்டிருக்கிறார். அவர் மாணவர்களைப் பார்த்து, "தம்பிகளா! நான் இப்போது ஒரு வித்தை காட்டப் போகிறேன். இதோ இந்த ஆப்பிள் பழத்தை நான் ஒரு பையன் தலையில் வைப்பேன். வைத்துவிட்டு இந்த வாளை வீசுவேன். இது ஆப்பிளை இரு துண்டுகளாக வெட்டும். மேல் பகுதி பறந்துபோய்த் தூரத்தில் விழும். கீழ்ப் பகுதி அப்படியே பையன் தலைமேல் நிற்கும். ஆனாலும், பையனுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது." என்கிறார்.

உடனே அங்கு உட்கார்ந்திருக்கும் மாணவர்களின் கண்கள் அங்குமிங்குமாகத் தேடுகின்றன. "பழத்தை யார் தலையில் வைக்கப் போகிறார்? அவருடன் எந்தப் பையனும் வரவில்லையே!" என்று சந்தேகப் படுகின்றனர்.

அப்போது அவர், "தம்பிகளா, இதோ என் வலது கையில் வாள் இருக்கிறது. இடது கையில் ஆப்பிள் இருக்கிறது. பழத்தை வைத்து வெட்டுவதற்குத் தலைதான் வேண்டும். இங்கு எத்தனையோ வீராதி வீரர்கள் இருக்கிறீர்கள். ஒரு வீரன் முன் வந்தால் போதும்" என்கிறார்.

எந்த மாணவனும் முன் வரவில்லை. ஒவ்வொரு மாணவனுக்கும் கையைக் காட்டி அழைக்கிறார்; பயனில்லை. அந்தப் பள்ளியில் கால் பந்தாட்டக் கோஷ்டிக்குத் தலைவனாக இருக்கிறான் ஒரு பையன். அவனுடைய நண்பர்கள் அவனைப் பிடித்து முன்னால் தள்ளுகிறார்கள். ஆனால், அவனோ பயந்து பின் வாங்குகிறான். "இங்கு ஒரு தைரியசாலி கூட இல்லையா?" என்று கேட்கிறார் வித்தைக்காரர்.

"இதோ நான் இருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே ஒரு தாவுத் தாவி அவர் முன்னால் வந்து மண்டியிட்டு உட்காருகிறான் ஒரு சிறுவன். ஆப்பிள் பழத்தை அவனது தலையிலே வித்தைக்காரர் வைக்கிறார்.



வைத்துவிட்டு வாளை ஓங்குகிறார். சிறுவன் சிறிதுகூட அஞ்சவில்லை. ஆடாமல் அசையாமல் அப்படியே உட்கார்ந்திருக்கிறான்.

வித்தைக்காரர் சொன்னபடி செய்து காட்டுகிறார். பழம் இரண்டாகிறது. பையனுக்கு எவ்வித ஆபத்துமில்லை. பெரியவரின் வித்தையையும், சிறுவனின் வீரத்தையும் மாணவர்கள் கைதட்டிப் பாராட்டுகிறார்கள்.

அவனுடைய பள்ளியிலே நீச்சல் குளம் ஒன்று இருந்தது. அது மிகப் பெரிய குளம். அதன் குறுக்கே இரண்டு பாலங்கள்கூட இருந்தன. அந்தக் குளத்திலே அவன் தினமும் நீச்சலடிப்பான். கரையோரமாக ஒரு மாணவன் நின்றால் அவனுக்குப் பின்புறமாகப் பூனைபோல் செல்வான். லபக்கென்று அவனைப் பிடித்து உள்ளே தள்ளிவிடுவான்.

அவன் அந்தப் பள்ளிக்கு வந்த புதிதில், ஒரு நாள் இப்படித்தான் ஒரு மாணவனைப் பிடித்து வேடிக்கையாகத் தள்ளிவிட்டான். எப்போதுமே தன் வயதுப் பையன்களை அல்லது தன்னைவிடச் சிறியவர்களைத்தான் அவன் தள்ளுவது வழக்கம். அந்தப் பையனும் பார்ப்பதற்கு மிகச் சிறியவன்போல் தான் இருந்தான். ஆனால் உண்மையிலே அவன் வயதில் பெரியவன்; மேல் வகுப்பில் படிப்பவன்; பள்ளி விளையாட்டுப் போட்டிகளில் முதல் பரிசு பெறுபவன். அவன் சும்மா இருப்பானா? சண்டைக்கு வந்துவிட்டான்.

"நான் யார் தெரியுமா? எப்படி நீ என்னைப் பிடித்துத் தள்ளலாம்" என்று கேட்டான்.

"உங்கள் உருவம் சிறியதாக இருந்தது. உங்களைக் கீழ் வகுப்பு மாணவன் என்று நினைத்து விட்டேன்......என் அப்பாகூட மிகப் பெரிய மனிதர். ஆனால் உருவத்தில் அவரும் சிறியவர்தான்."


இதைக் கேட்டதும் கோபம் கொண்ட மாணவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. "சரி, போ...இனி இந்த மாதிரி வீண் வம்புக்குப் போகாதே" என்று சொல்லி அனுப்பி விட்டான்.

சாமர்த்தியமாகத் தன் அப்பாவைப் பற்றிச் சொல்லி அவன் தப்பித்துக் கொண்டான். ஆனாலும், அவன் சொன்னதில் பொய்யே இல்லை. அவனுடைய அப்பா மிகப் பெரிய மனிதர்தான்; உருவத்திலே சிறியவர் தான். ஆம், இங்கிலாந்தின் நிதி அமைச்சராக இருந்த ராண்டல்ப் சர்ச்சில் அவனுடைய அப்பாதான். ஆனால், அவனே பிற்காலத்தில் இங்கிலாந்தின் பிரதம அமைச்சராகவே ஆகி விட்டான்.

பெரிய பேச்சாளர், சிறந்த எழுத்தாளர், உயர்ந்த ராஜ தந்திரி என்றெல்லாம் உலகம் போற்றிய **வின்ஸ்டன் சர்ச்சில்**, ராண்டல்ப் சர்ச்சிலின் மகன்தான்!



# ஆணியும் ஆல்பர்ட்டும்



அப்பாவின் மேசை மேல் ஒரு கிண்ணம் இருந்தது. நாலு வயதுச் சிறுவனாகிய ஆல்பர்ட் அதன் அருகில் சென்றான். கிண்ணத்தை உற்றுப் பார்த்தான். அதன் நடுவிலே ஒரு கம்பி செங்குத்தாக இருந்தது. அதன் மேல் கடிகார முள்போல் ஓர் ஊசி பொருத்தப்பட்டிருந்தது. அவன் அதைக் கையில் எடுத்தான். அப்போது அந்த ஊசி மெதுவாக ஆடியது. கிண்ணத்தை இப்படியும் அப்படியுமாக அவன் திருப்பினான். எந்தப் பக்கமாகத் திருப்பினாலும் அந்த ஊசி தெற்கு வடக்காகவே நின்றது. மேற்குப் பக்கமாகத் திருப்பினான். ஊசி தெற்கு வடக்கா

கவே நின்றது. கிழக்குப் பக்கமாகத் திருப்பினுன். அப்போதும் அது தெற்கு வடக்காகவே நின்றது. அவனுக்கு வியப்பாக இருந்தது.

"அப்பா, அப்பா" என்று அழைத்தான். அப்பா அருகிலே வந்தார்.

"இது என்னப்பா?" என்று கேட்டான்.

"இதுதான் காந்த ஊசி. கப்பலில் செல்லும்போது திசை அறிவதற்கு இது உதவியாக இருக்கும்" என்று அப்பா பதில் சொன்னுர். மின்சாரக் கருவிகளை விற்பனை செய்வதுதான் அவருடைய தொழில்.

அன்று முதல் அவர் கொண்டுவரும் மின்சாரக் கருவிகளை எல்லாம் ஆல்பர்ட் ஆசை ஆசையாகப் பார்ப்பான். 'இது என்ன? அது என்ன?' என்று கேள்விகள் கேட்பான். அவன் கேட்கும் கேள்விகளைக் கேட்டு அப்பா இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவார். "நம் மகன் புத்திசாலித்தனமாகக் கேள்வி கேட்கிருனே!" என்று ஒரு பக்கம் மகிழ்ச்சி. "முன்பெல்லாம் திக்கித் திக்கிப் பேசுவான். இப்போது சுத்தமாகப் பேசுகிருனே!" என்று மற்ருெரு பக்கம் மகிழ்ச்சி.

ஆல்பர்ட் பிறந்து பல மாதங்கள் வரை பேசவே இல்லை. பேச ஆரம்பித்த பிறகும் புரியும்படி பேச மாட்டான். வாய் குளறும். "பாவம், ஒரே பிள்ளை. அதுவும் இப்படி



உளறுவாயாக இருக்கிறதே!" என்று அக்கம் பக்கத்திலிருந்தவர்களெல்லாம் அனுதாபப் படுவார்களாம்.

சின்னஞ்சிறு குழந்தையா யிருந்தபோது ஆல்பர்ட்டைப் பார்த்துப் பலர் அனுதாபப் பட்டார்கள். பள்ளியில் சேர்ந்த பிறகு பல மாணவர்கள் அவனைப் பார்த்து முகம் சுளித்தார்கள். காரணம்?

ஒருநாள் ஓர் ஆசிரியர் துருப்பிடித்த ஆணி ஒன்றை வகுப்புக்குக் கொண்டு வந்தார். "மாணவர்களே! நம் ஏசுநாதரைச் சிலுவையில் அறைந்து கொன்றவர்கள் யார்?" என்று கேட்டார்.

"யூதர்கள்" என்ருர்கள் மாணவர்கள்.

"ஏசுநாதரைக் கொல்ல உதவிய ஆணி எது தெரியுமா? இதோ இருக்கிறது" என்று அந்த ஆணியை மேலே தூக்கிப் பிடித்துக் காட்டினுர் ஆசிரியர்.

மாணவர்கள் அந்த ஆணியைப் பார்க்கவில்லை. ஆல்பர்ட்டையே முறைத்துப் பார்த்தனர். ஆல்பர்ட்டுக்கு இது அவமானமாக இருந்தது. வேதனையாகவும் இருந்தது. காரணம், அவன் யூதர் குடும்பத்திலே பிறந்தவன்.

இப்படி அனுதாபத்துக்கும் வெறுப்புக்கும் ஒரு காலத்தில் ஆளாகியிருந்த ஆல்பர்ட் பிற்காலத்தில் உலகமே போற்றும் ஒரு பெரிய விஞ்ஞானியானுன்! ஆல்பர்ட்

ஐன்ஸ்டின் என்ருல், "அடேயப்பா! அவர் பௌதிகத்துக்குப் புத்துயிர் அளித்த மேதையல்லவா! மிகப் பெரிய கணிதநிபுணரல்லவா! நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியல்லவா!" என்றெல்லாம் பாராட்டத் தொடங்கி விடுவீர்கள்!

ஆனல், ஐன்ஸ்டினுக்குப் பாராட்டு என்ருலே பிடிக்காது. எப்போதும் அடக்கமாகவும், அமைதியாகவும், எளிமையாகவும் அவர் இருப்பார்.

ஒருநாள், பெர்லின் நகரில் டிராம் வண்டியில் ஐன்ஸ்டின் பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது, டிராம் கட்டணம் செலுத்த அவரிடம் சில்லறை இல்லை. ஆகையால், நோட்டு ஒன்றைக் கண்டக்டரிடம் நீட்டினுர். நோட்டைப் பெற்றுக்கொண்ட கண்டக்டர், கட்டணம் போக மீதிச் சில்லறையை ஐன்ஸ்டினிடம் கொடுத்தார். சில்லறை சரியாகத்தான் இருந்தது. ஆனுலும், எங்கோ கவனமாக இருந்த ஐன்ஸ்டின் சில்லறையை எண்ணிப் பார்த்துவிட்டு, "என்னப்பா, சரியாக இல்லையே!" என்ருர்.

கண்டக்டருக்குக் கோபம் வந்துவிட்டது. "எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. சாதாரணக் கூட்டல் கழித்தல்கூடத் தெரியவில்லையே, உமக்கு!" என்று சீறி விழுந்தார்.

அவர் ஒரு பெரிய கணித மேதை என்பது, பாவம், அப்போது அந்தக் கண்டக்டருக்குத் தெரியாது!



# பொம்மைக்குக் கண் வைத்தவள்



அவளுக்கோ கண் குருடு. காது செவிடு. பத்து வயதுவரை வாயும் ஊமையாகவே இருந்தது. பாவம், பிறந்த பத்தொன்பதாவது மாதத்தில் திடீரென்று அவளுக்கு நோய் கண்டது. கடுமையான காய்ச்சல்! தாயும் தந்தையும் வைத்தியர்களை அழைத்து வந்து காட்டினர்.

'குழந்தை பிழைக்காது' என்று வைத்தியர்கள் கைவிட்டு விட்டனர். ஆனுலும், எமன் ஏமாந்து போனுன்! குழந்தை பிழைத்துக் கொண்டது! பெற்ருேர் அளவில்லாத

மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால், அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. காரணம், அந்தப் பொல்லாத நோய் போகும்போது, குழந்தையின் பார்க்கும் சக்தி, கேட்கும் சக்தி, பேசும் சக்தி ஆகியவற்றையும் கூடவே கொண்டு போய்விட்டது!

ஆனாலும், அவள் சிறிய வயதிலே மிகவும் கெட்டிக்காரியாக இருந்தாள். தோட்டத்திலுள்ள பூக்களையும் செடிகளையும் தொட்டுப் பார்த்தே அவைகளின் பெயர்களைத் தெரிந்து கொள்வாள்.

எவருடைய உதவியும் இல்லாமல் அவளாகவே மாடிப் படிகளில் ஏறி அறைக்குச் செல்வாள். பெட்டியைத் திறந்து உடைகளை எடுத்து அணிந்து கொள்வாள். தலைவாரிக் கொள்வாள். முகத்துக்குப் பவுடர் பூசிக் கொள்வாள்.

பூட்டு, சாவி இரண்டையும் அவள் தடவித் தடவிப் பார்த்தே அவற்றின் உபயோகங்களைத் தெரிந்துகொண்டாள். அறையை எப்படிப் பூட்டுவது என்பதையும் கற்றுக் கொண்டாள்.

ஒருநாள், அவளுடைய அம்மாவை உக்கிராண அறைக்குள் வைத்துப் பூட்டி விட்டாள். பூட்டிவிட்டுக் கதவிலே சாய்ந்து கொண்டு வயிறு குலுங்கச் சிரித்தாள். வெகு நேரம் சென்ற பிறகே அம்மாவுக்கு விடுதலை கிடைத்தது.



அவளுக்கு ஆறு வயது இருக்கும். அப்போது ஒருநாள் அவளுடைய அத்தை அவளிடம் ஒரு துணிப் பொம்மையைக் கொடுத்தாள். அந்தப் பொம்மையைக் கண் தெரியாத அச்சிறுமி மார்போடு அணைத்துக் கொண்டாள். மெதுவாக அதைத் தொட்டுத் தடவிப் பார்த்தாள். அதன் முகத்தில் கண், காது, மூக்கு, வாய் எதுவுமே இல்லை. திரும்பத் திரும்பத் தடவிப் பார்த்தாள். "என்ன இது! இதற்கும் கண்கள் இல்லையா?" என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள். "இதற்கு எப்படிக் கண் வைப்பது?" என்று சிறிதுநேரம் யோசித்துப் பார்த்தாள்.

திடீரென்று அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. அத்தையின் அருகிலே சென்றாள். அவளுடைய சட்டையில் கையை வைத்துத் தடவிப் பார்த்தாள். அந்தச் சட்டையின் ஓரத்தில் கண்ணாடி மணிகள் இருந்தன. உருண்டையாக இருந்த அந்த மணிகளில் இரண்டை 'லபக்' கென்று அவள் பறித்தாள். அத்தையின் கையிலே கொடுத்து, பொம்மையின் முகத்தைக் காட்டினாள்.

அத்தைக்கு முதலில் புரியவில்லை. பொம்மையின் முகத்தில் கண்கள் இருக்கவேண்டிய இடத்தில் விரலால் குத்திக் குத்திக் காட்டினாள். அப்போது அத்தைக்குப் புரிந்துவிட்டது. உடனே அவள் அந்தக் கண்ணாடி மணிகளைப் பொம்மையின் முகத்திலே கண்

கள் இருக்கவேண்டிய இடத்திலே வைத்துத் தைத்தாள். பிறகு சிறுமியிடம் கொடுத்தாள். பொம்மையின் முகத்தைத் தடவித் தடவிப் பார்த்து அச்சிறுமி ஆனந்தம் அடைந்தாள்.


ஒன்பது வயது வரைதான் அவள் ஊமையாக இருந்தாள். அப்புறம் பேசும் சக்தியைப் பெற்றுவிட்டாள். ஆனாலும், பார்க்கும் சக்தியையோ, கேட்கும் சக்தியையோ இன்றுவரை அவள் பெறவில்லை. அதனால் என்ன? கண்ணும் காதும் நன்றாக இருப்பவர்களையெல்லாம் அவள் பல வழிகளில் தனது இடைவிடா முயற்சியினால் மிஞ்சி விட்டாள்!

அவள் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறாள். நூற்றுக் கணக்கான புத்தகங்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொண்டிருக்கிறாள். ஏழு புத்தகங்களை அவளே எழுதியிருக்கிறாள். திரைப்படத்தில் கூட அவள் நடித்திருக்கிறாள்! ஆம், அவளுடைய அதிசய வாழ்க்கையைத் திரைப் படமாக எடுத்தார்கள். அதில்தான் அவள் நடித்திருக்கிறாள். ஒன்பது ஆண்டுகள் ஊமையாக இருந்த அவள், உலகின் பல பாகங்களுக்கும் சென்று சொற்பொழிவு செய்திருக்கிறாள். சில ஆண்டுகளுக்கு முன்பு சென்னைக்குக்கூட வந்தாள்.

இன்று அவள் சிறுமியல்ல; 87 வயதுப் பாட்டி! ஹெலன் கெல்லர் என்ற அமெரிக்கப் பெண்மணிதான் அந்தப் பாட்டி!



# குதிரையின் குதூகலம்



ஜவாஹர்லால் நேரு சிறுவராயிருந்தபோது, அவருடைய அப்பாவிடம் ஒரு கணக்குப் பிள்ளை இருந்தார். முன்ஷி முபராக் அலி என்பது அவருடைய பெயர். குழந்தைகளிடத்தில் அவர் மிகவும் அன்பாக இருப்பார். ஜவாஹர்லாலிடத்தில் அவருக்கு ஒரு தனி அன்பு.

முபராக் அலியைக் கண்டதும் ஜவாஹர் ஓடிப்போய் அவரைக் கட்டிப் பிடித்துக் கொள்வார். கதை சொல்லும்படி கேட்பார். முபராக் அலி அரபிக் கதைகளையும், மற்றக் கதைகளையும் நேரிலே பார்த்ததுபோல் கூறுவார். அத்துடன் 1857-ஆம் ஆண்டில் நம்

தேசத்தில் நடந்த சுதந்திரப் போரைப் பற்றி யும் சொல்வார். அந்தப் போரிலே அவரு டைய குடும்பத்தைச் சேர்ந்த பலரை ஆங்கி லேயர் கொன்றுவிட்டார்களாம். அதையெல் லாம் கேட்கக் கேட்க நேருவுக்கு வருத்தமா யிருக்கும். ஆங்கிலேயரின் ஆட்சிமீது அவ ருக்குக் கோபம் கோபமாக வரும்.

ஏழு, எட்டு வயதுக் குழந்தையா யிருக் கும்போதே,ஜவாஹர் நன்ருகக் குதிரைச்சவாரி செய்வார். அவருக்கு அவருடைய அப்பா அழகான குதிரைக் குட்டி ஒன்றை வாங்கிக் கொடுத்தார். தினமும் ஜவாஹர் அதன் மேல் ஏறி, அலகாபாத் நகரை ஆனந்தமாகச் சுற்றி வருவார். அப்போது அலகாபாத்தில் குதிரைப் படையைச் சேர்ந்த குதிரை வீரர் ஒருவர் இருந்தார். அவருடன் சேர்ந்து தின மும் நேரு குதிரைச் சவாரி செய்வார்.

ஒருநாள் அரபிக் கதையில் வரும் குதிரை களைப் பற்றி முபராக் அலி ஜவாஹரிடம் கூறினுர். அந்தக் குதிரைகள் செய்த வீர தீரச் செயல்களைப் பற்றியும், அவை எப்படிப் பறந்து சென்றன என்பதைப் பற்றியும் விவர மாகக் கூறினுர். அன்று குதிரைச் சவாரி செய் யும்போது, முபராக் அலி சொன்ன கதைகளை யெல்லாம் குதிரைக் குட்டியிடம் ஜவாஹர் கூறினுர். கூறிவிட்டு, "நீயும் அந்தக் குதிரைகளைப்போல் பறக்கவேண்டும். உம், எங்கே பார்க்கலாம்" என்ருர். அதைத் தட்டி



ஓட்டினுர். குதிரைக் குட்டி நாலுகால் பாய்ச் சலில் ஓட ஆரம்பித்துவிட்டது. ஜவாஹருக்கு ஒரே உற்சாகம். "உம், அப்படித்தான். ஓடு, ஓடு" என்று விரட்டினுர். குதிரைக் குட்டிக்கு ஒரே குதூகலம். கண்மண் தெரியா மல் தாவித்தாவி ஓடியது. தாவித் தாவி ஓடும் போது ஜவாஹர் தவறிக் கீழே விழுந்து விட் டார். அவர் விழுந்ததைக்கூடக் குதிரை கவனிக்கவில்லை. வீடு போய்த்தான் அது நின்றது.

அப்போது டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தார் நேருவின் தந்தை. அவர் குதிரை மட்டும் தனியாக வந்ததைக் கண்ட தும், "ஜவாஹர் எங்கே? அவனுக்கு என்ன ஆயிற்ருே!" என்று திகில் அடைந்தார். உடனே ஜவாஹருடைய தாய்க்குத் தகவல் எட்டியது. எல்லோரும் அலறி அடித்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டார்கள்; ஜவாஹரைத் தேடிக்கொண்டு போனுர்கள். அது ஒரு பெரிய ஊர்வலம் போலவே இருந்தது.

இச் சமயத்தில் குதிரையிலிருந்து விழுந்த ஜவாஹர் மெதுவாக எழுந்தார். ஆடையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிவிட்டார். பிறகு வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார்.

வழியிலே அவரைப் பார்த்துவிட்டனர், அவருடைய பெற்ருேரும், மற்றவர்களும். "பெரிய வீரனை வரவேற்பதற்கு வருவது

போல் அல்லவா கூட்டமாக வருகிறார்கள்!'' என்று ஜவாஹர் நினைத்தார்.

ஜவாஹரைக் கண்டதும் அவருடைய அப்பாவும், அம்மாவும் ஓடிச் சென்று, "ஏதேனும் காயம் பட்டதா?'' என்று பரிவோடு கேட்டார்கள்.

"இல்லையே. எனக்கு எவ்வித காயமும் இல்லை'' என்று சிரித்துக்கொண்டே கூறினார் ஜவாஹர்.

"நல்லவேளை'' என்று பெருமூச்சு விட்டாள் அவரது அம்மா. "குதிரைக் குட்டி வீட்டிற்குப் பத்திரமாக வந்துவிட்டதா?'' என்று கேட்டார் ஜவாஹர்.

"அது மட்டும் வந்ததால்தானே நாங்கள் பதறிப் போனோம்'' என்றார் அப்பா.

எல்லோரும் வீடு திரும்பினர். குதிரைக் குட்டி ஜவாஹரைப் பார்த்தது. ஜவாஹரும் குதிரைக் குட்டியைப் பார்த்தார். "பார்க்கிறதைப் பார். என்னைக் கீழே தள்ளிவிட்டு நீ மட்டும் வந்து விட்டாயே! உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று ஜவாஹர் ஆத்திரப் பட்டாரா? இல்லை. எப்போதும்போல் அதனிடம் அவர் அன்பு காட்டினார். அன்று முதல் குதிரைச் சவாரி செய்வதை விட்டுவிட்டாரோ? அதுவும் இல்லை. வழக்கம்போல் தினமும் அதன்மீது ஏறி இளவரசரைப் போல் சவாரி செய்து வந்தார்.



# அன்னை சொன்ன மகான்



"விங்யா'' என்று அழைத்தாள் அம்மா.

"இதோ வந்துவிட்டேன், அம்மா'' என்று கூறிக்கொண்டே ஓடி வந்தான் சிறுவன் விங்யா.

அம்மாவின் எதிரிலே ஒரு பாத்திரம் இருந்தது. அதில் நிறைய இனிப்புப் பண்டங்கள் இருந்தன.

"இதெல்லாம் எதற்கு அம்மா?'' என்று விங்யா கேட்கவில்லை. அம்மா எதற்காக அழைத்திருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். உடனே அந்தப் பாத்திரத்தைக் கையில்

எடுத்துக் கொண்டான். 'குடுகுடு' என்று அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளுக்கு ஓடினான். எல்லோருக்கும் விநியோகம் செய்துவிட்டு வெறும் கையுடன் வீடு திரும்பினான். அப்போது அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவனைப் பார்த்து அம்மாவும் மிக மிக மகிழ்ச்சி அடைந்தாள்.

இந்த மாதிரி நிகழ்ச்சி அந்த வீட்டிலே அடிக்கடி நடக்கும். விசேஷமாக எந்தத் தின்பண்டம் செய்தாலும் அதை அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்குக் கொடுத்தனுப்புவாள் அந்த அம்மா. தின்பண்டங்களை விநியோகித்து வருவான் அந்தச் சிறுவன்.

அந்த அம்மாவுக்குத் தெய்வபக்தி அதிகம். இரவு நேரங்களில் பக்தர்களின் கதைகளை அவள் மகனுக்குக் கூறுவாள். சில சமயங்களில் அவளுக்கும் கதை கேட்கவேண்டும் என்ற ஆசை தோன்றும். அப்போது மகனிடம் சொல்லுவாள். உடனே, அவன் புத்தகத்தை எடுத்து வருவான்; அம்மா பக்கத்திலே உட்கார்ந்து, அதிலுள்ள கதைகளைப் படித்துச் சொல்லுவான்.

ஒருநாள், "விங்யா, 'பக்த விஜயம்' புத்தகத்தை எடுத்துவந்து படி. கேட்கவேண்டும் போலிருக்கிறது" என்றாள். பக்த விஜயத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போது, திடீரென்று விங்யாவுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. "ஏனம்மா, பெரிய பெரிய



மகான்களைப் பற்றியெல்லாம் இதில் படிக்கிறோமே, இந்த மாதிரி மகான்கள் இப்போது இல்லையா?" என்று கேட்டான்.

"இப்போதும் இருக்கலாம். ஆனால், நம் கண்களுக்குத்தான் தெரியவில்லை. மகான்கள் இல்லாதபோனால், இந்த உலகம் இயங்காது" என்று பதில் சொன்னாள் அம்மா.

பத்துப் பன்னிரண்டு ஆண்டுகள் சென்றன. அந்தச் சிறுவன் வாலிபனாக வளர்ந்தான். இருபத்து ஓராவது வயதில் ஒரு பெரிய மகாத்மாவைக் கண்டான். உடனே "ஆ! அன்று ஒருநாள் அம்மா சொன்னாளே, அது உண்மைதான். இதோ ஒரு மகான் என் எதிரிலே இருக்கிறாரே! நான் மகானைக் கண்டுவிட்டேன்! இந்த மகானால்தான் நம் நாடு இயங்குகிறது" என்று பூரிப்படைந்தான். அன்று அவன் கண்ட மகான் மகாத்மா காந்தியேதான்! ஆனால், அந்த வாலிபனும் ஒரு காலத்தில் மகானாக விளங்கப் போகிறான் என்பது அப்போது யாருக்குமே தெரியாது. ஆனால், இப்போது நம் எல்லோருக்குமே தெரியும்!

"விங்யா என்ற பெயரில் எந்த மகானும் இருப்பதாகத் தெரியவில்லையே!" என்று தானே கேட்கிறீர்கள்? 'விங்யா' என்பது அவருடைய அம்மா வைத்த செல்லப் பெயர். 'விநாயக்' என்பதுதான் அவருக்கு இட்ட


பெயர். ஆனால், இந்தப் பெயருக்குப் பின்னால், தகப்பனார் பெயரையும், அதற்குப் பின்னால் குடும்பப் பெயரையும் சேர்த்து 'விநாயக் நரஹரி பாவே' என்றுதான் பல ஆண்டுகள் அழைத்து வந்தார்கள். இந்த நீண்ட பெயரை **'விநோபா'** என்று காந்திஜி குறுக்கிவிட்டார். காந்தி வைத்த பெயரைச் சொன்னதும் உங்களுக்கு மட்டுமல்ல; உலகத்துக்கே இன்று தெரிகிறது.

சின்ன வயதில் தின்பண்ட தானம் செய்வதில் மகிழ்ச்சி அடைந்த விநோபா பாவே, இன்று பூதானம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைந்து வருகிறார். "உங்களுக்கு ஐந்து குழந்தைகள் இருந்தால் உங்களுடைய நிலத்தை ஐந்து பங்கு போடுவீர்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு பாகம் கொடுப்பீர்கள். ஆறு குழந்தைகள் இருந்தால், ஆறு பங்கு போடுவீர்கள் அல்லவா? என்னையும் உங்கள் குழந்தையாக ஏற்றுக்கொண்டு எனக்கு ஒரு பங்கு கொடுங்கள்" என்று நிலம் வைத்திருப்பவர்களை அவர் கேட்கிறார். தானமாகக் கிடைக்கும் நிலத்தை, அவர் நிலம் இல்லாத ஏழைகளுக்குப் பங்கு போட்டுக் கொடுக்கிறார்.

மகாத்மா காந்திக்குப் பிறகு, அவருடைய கொள்கைகளைப் பின்பற்றி, மக்களுக்கு அறநெறியில் வழிகாட்டி வரும் பெரியவர் விநோபா அவர்களே.



# மாயமாய் மறைந்தவன்!



'ஜெய் ஹிந்த்'

இதைச் சொல்லும் போதே, நமக்கு ஒரு வீர உணர்ச்சி ஏற்படுகின்றது; நம் தேச பக்தி அதிகமாகின்றது.

'ஜெய் ஹிந்த்'—அதாவது 'வெல்க இந்தியா!' என்ற மந்திரத்தை நமக்கெல்லாம் சொல்லித் தந்தவர் யார்? நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் என்பது உங்களுக்குத் தெரியும்.

சிறிய வயதிலே சுபாஷ் சந்திர போஸிடத்தில் தெய்வ பக்தி, தேச பக்தி இரண்டும் இருந்தன. தெய்வ பக்தியை ஊட்டி உடலை வளர்த்தாள், அவருடைய அன்னை பிரபாவதி அம்மையார். தேச பக்தியை ஊட்டி அறிவை

வளர்த்தார், அவருடைய பள்ளித் தலைமை ஆசிரியர் பெனி பாபு.

அன்று இரவு பத்து மணி. அந்த வீட்டிலே ஒரே பரபரப்பாக இருந்தது.

"எங்கே போயிருப்பான் சுபாஷ்? இன்னும் வரவில்லையே!"

"எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்து விட்டோம். அகப்பட வில்லையே!"

"பகல் சாப்பாட்டுக்குப் பிறகு, இராமகிருஷ்ண பரமஹம்சர் எழுதிய புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தானே! எப்பொழுது போனான், எப்படிப் போனான், எங்கே போனான், ஏன் போனான்? ஒன்றுமே புரியவில்லையே!"

"ஐயோ, என் மகனே! நீ எங்கு போனாயோ!"

மணி பதினொன்று, பன்னிரண்டு, ஒன்று, இரண்டு, என்று ஓடிக்கொண்டே யிருந்தது. அப்பாவும் வேலையாட்களும் அன்று இரவு முழுவதும் தேடினார்கள். சுபாஷ் அகப்படவில்லை. மறுநாளும் தேடினார்கள். மூன்றுவது நாளும் தேடினார்கள். இப்படிப் பல நாட்கள் தேடிப் பார்த்தும் பயனில்லை.

ஆனால், அதே சமயம் சிறுவரான சுபாஷ், இமயமலையை நோக்கி நடந்து கொண்டிருந்தார்; இரவு பகல் பாராமல் நடந்தார்.



வழியெல்லாம் ஒரே காடு. அந்தக் காட்டுப் பாதையில் பகலில் செல்லவே பயமாக இருக்கும். இரவு நேரத்தில் கேட்கவேண்டுமா? இரவிலே இரைதேடி அலையும் மிருகங்கள், மேலே வட்டமிட்டுத் திரியும் பறவைகள், அவைகள் போடுகின்ற பயங்கர சப்தங்கள் இவற்றையெல்லாம் அவர் சிறிதும் பொருட் படுத்தவில்லை. "எப்படியும் இமய மலைச் சாரலை நாம் அடைந்துவிட வேண்டும். அங்குள்ள சந்நியாசிகளைக் காணவேண்டும். அவர்களில் ஒருவரை நம் குருவாகப் பெற வேண்டும். அங்கேயே தங்கிவிட வேண்டும்" என்ற ஒரே நினைப்புடன் அவர் நடந்து கொண்டே இருந்தார்.

இமயமலையில் வசிக்கும் சந்நியாசிகளைப் பற்றி அவர் கேள்விப்பட்டிருக்கிறார். அவர்கள் கடும் தவம் செய்து முக்தி அடைகிறார்கள் என்றும் அவருக்குச் சிலர் கூறி இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி சுபாஷ் அடிக்கடி நினைப்பார். தாமும் ஒரு சாமியாராக வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார். ஆனால், அப்பா அம்மாவிடம் சாமியாராகப் போக வேண்டும் என்று சொன்னால், அவர்கள் சரி என்பார்களா? அதனால்தான் யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டார்! அறு சுவை உணவுடன் செல்லமாக வளர்ந்த பிள்ளை காய் கனிகளைத் தின்றார்; தண்ணீரைக் குடித்தார்; கால்நோவ அலைந்

தார். இப்படி ஒரு மாதமா, இரண்டு மாதங்களா? ஆறுமாதங்கள் ஓய்வின்றி அலைந்தும் அவர் நினைத்தது கைகூடவில்லை.

வழியிலே அவர் பல சந்நியாசிகளைக் கண்டார். அவர்களில் பலர் கஞ்சா, பீடி முதலியவற்றைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தெய்வ நினைப்பே இல்லை. ஆனாலும், பெரிய பக்தர்கள் போல் பாசாங்கு செய்தார்கள். சுபாஷிற்கு அவர்கள் மீது வெறுப்பு ஏற்பட்டது. அதே சமயம் அப்பா அம்மாவைப் பற்றிய நினைப்பும் வந்தது. "ஐயோ, என்னைக் காணாமல் அம்மாவும் அப்பாவும் எவ்வளவு வேதனைப்படுகிறார்களோ! சரி, இனி அலைவதில் பயனில்லை. உடனே வீடு திரும்ப வேண்டியதுதான்" என்ற முடிவுக்கு வந்தார்.

விரைவிலே வீடு வந்து சேர்ந்தார். எதிர்பாராமல் திடீரென சுபாஷ் அங்கு வந்ததைக் கண்டதும், எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். அப்பொழுது அவருடைய அம்மாவும் மற்றவர்களும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

சின்ன வயதில் திடீரெனக் காணாமற் போன சுபாஷ், ஆறு மாதங்களுக்குப் பிறகு திடீரெனத் திரும்பிவந்து சேர்ந்தார். ஆனால், 1941-ல் இந்தியாவைவிட்டு மாயமாய் மறைந்த சுபாஷ் பிறகு திரும்பி வரவே இல்லை!



# அப்பா இல்லாத பிள்ளை



'நான் ஹே!'

'நான் ஹே!'

இப்படித்தான் அந்தச் சிறுவனை எல்லோரும் அழைப்பார்கள்; 'நான்ஹே' என்றால் 'சின்னப் பையன்' என்று பொருள். மிகவும் குள்ளமாக அவன் இருந்ததால்தான் அப்படி அழைத்தார்கள்.

அந்தச் சின்னப் பையன் மிகவும் ஏழைப் பையனாகவும் இருந்தான். அவன் பிறந்த 18வது மாதத்திலேயே அவன் அப்பா இறந்து விட்டார். அவனுடைய தாத்தா, அவனை நன்றாகப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டுவர ஆசைப்பட்டார். அரிச்சந்திரா பள்ளியில் அவனைச் சேர்த்தார்.

அவனுக்கு அப்போது வயது ஆறு இருக்கும். ஒருநாள் பள்ளித் தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். விளையாட்டு முடிந்ததும் எல்லோரும் பேசிக்கொண்டே வீடு திரும்பினார்கள். வழியிலே ஒரு தோப்பு இருந்தது. அதற்குள் எல்லோரும் சென்றார்கள்.

தோப்பிலே ஏராளமான செடிகளும், மரங்களும் இருந்தன. செடிகள் நிறையப் பூக்கள் இருந்தன. மரங்கள் நிறையப் பழங்கள் இருந்தன. அந்தச் சிறுவனுக்குப் பூக்கள் என்றால் பிரியம் அதிகம். அதனால், அவன் ஓரிடத்திலே நின்றான். வண்ண வண்ணப் பூக்களைப் பார்த்துப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தான். ஆனால், மற்ற சிறுவர்களோ பூக்களைப் பார்த்துக்கொண்டு நிற்கவில்லை. 'சரசர' என்று மரங்களின் மேல் ஏறினார்கள்; பழங்களைப் பறித்தார்கள்; கடித்துத் தின்றார்கள்; ஆனந்தக் கூச்சல் போட்டார்கள்.

தோட்டக்காரர் இதை அறிந்தார். உடனே கோபமாகக் கத்திக் கொண்டே ஓடி வந்தார். அவர் வருவதற்குள் எல்லோரும் தரையிலே தாவிக் குதித்தார்கள்; தலை தெறிக்க ஓடினார்கள். தோட்டக்காரர் அவர்களைத் துரத்திச் சென்றார். ஆனாலும், பலனில்லை. பழம் பறித்தவர்களில் ஒருவர்கூட அவரிடம் சிக்கவில்லை. எல்லோரும் தப்பிவிட்டனர். எல்லோரும் என்றா சொன்னேன்? இல்லை; ஒரே ஒருவன் மட்டும் அவரிடம் சரியாக அகப்பட்டுக் கொண்டுவிட்டான்! அவன்தான் பூக்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த சிறுவன்.



தோட்டக்காரர் மிகுந்த ஆத்திரத்துடன் அவன் அருகிலே ஓடி வந்தார். ஆவேசம் வந்தவர் போலக் கத்தினார். "டேய் பொடிப் பயலே, இன்று உனக்குச் சரியான பாடம் கற்பிக்கிறேன். இனி, நீயும் உன் தோழர்களும் இந்தப் பக்கம் எட்டிப் பார்க்காதபடி செய்யப் போகிறேன்" என்றார்.

அவரது உருவமே பார்ப்பதற்குப் பயங்கரமாக இருந்தது. என்ன செய்வதென்றே சிறுவனுக்குப் புரியவில்லை. கை கால்களெல்லாம் நடுநடுங்கின.

தோட்டக்காரரிடம் அழாக் குறையாக, "ஐயா, நானோ பரம ஏழை. எனக்கு அப்பாவும் இல்லை. தயவு செய்து என்னை ஒன்றும் செய்யாதீர்கள்." என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

"என்ன! ஏழை என்கிறாய். அத்துடன் அப்பாவும் இல்லை என்கிறாய். அப்பா இல்லாத ஏழை தப்புத் தவறு செய்யலாமோ? மற்றவர்களைவிட நீ மிகவும் நல்லவனாக, யோக்கியனாக நடக்க வேண்டாமோ?" என்று கேட்டார் தோட்டக்காரர். அச்சிறுவனின்

களங்கமற்ற முகமும், அவனது பேச்சும் அவரது மனத்தை மாற்றிவிட்டன.

"சரி, போ. இனி இந்த மாதிரி நடந்து கொள்ளாதே" என்று எச்சரித்து அவனை அனுப்பினார்.


"தோட்டக்காரர் சொல்வது சரிதான். அப்பா இருந்தால், நாம் தவறு செய்தால் திருத்துவார். இப்போது நம்மை நாமேதான் திருத்திக் கொள்ள வேண்டும். இனி, மிகவும் நல்லவனாக, ஒழுக்கமுள்ளவனாக நான் நடப்பேன்." என்று அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். சொன்னதோடு நிற்கவில்லை; செய்கையிலும் காட்டினான்.

அரிச்சந்திரா பள்ளியில் படித்த அவன், அரிச்சந்திரனைப் போல் சத்தியத்தைக் கடைப்பிடித்தான். அது மட்டுமல்ல; காந்தித் தாத்தா பிறந்த தேதியிலே பிறந்த அவன் (அக்டோபர் 2-ல்) காந்திஜியின் வழிகளை முழுக்க முழுக்கப் பின்பற்றினான். அவன் வளர, வளர அவனது பேரும், புகழும் வளர்ந்தன. கடைசி காலத்தில், இந்தியாவின் பிரதமராக இருந்து, எல்லோருடைய உள்ளத்திலும் இடம்பெற்றுவிட்டான்.

நேருஜிக்குப் பிறகு நம் பிரதமராய் விளங்கிய லால்பகதூர் சாஸ்திரிதான் அச் சிறுவன் என்பதை நான் சொல்லவும் வேண்டுமா ?



# கோட்டையில் கொடி



கதவு தட்டும் சத்தம் கேட்டது. கிருஷ்ண சிம்மன் எழுந்து சென்று கதவைத் திறந்தார். எதிரே நின்று கொண்டிருந்தார்கள் போலீஸ்காரர்கள். "உம்மைக் கைது செய்ய வந்திருக்கிறோம். ஆங்கில ஆட்சிக்கு விரோதமாக நீர் புரட்சி செய்து வருகிறீர். உம்மை வெளியில் விட்டுவைப்பது ஆபத்து !" என்றார் போலீஸ் அதிகாரி.

கிருஷ்ண சிம்மன் முகத்தில் புன்னகை அரும்பியது. "உம், இதோ என் கைகள். விலங்கை மாட்டுங்கள்" என்று கூறிக் கைகள் இரண்டையும் அவர்கள் முன்பு நீட்டினார். உடனே அவரது கைகளில் விலங்கு மாட்டினார்கள். போலீஸ் வண்டியில் அவரை

ஏற்றினார்கள். சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றார்கள்.

அப்போது அவருடைய மனைவி கருவுற்றிருந்தாள். இன்னும் சில நாட்களில் குழந்தை பிறந்துவிடும். ஆனாலும், அந்த அம்மாள் கண் கலங்கவில்லை. "ஆண்டவனே, எங்களுக்கு உன் அருளால் ஆண் குழந்தை பிறக்கவேண்டும். அந்தக் குழந்தை தந்தையைப் போலவே தேசபக்தனாகவும் தியாக சீலனாகவும் விளங்கவேண்டும்" என்று நாள் தோறும் வேண்டினாள்.

அம்மாவின் வேண்டுதல் பலித்தது. ஒரு மகன் பிறந்தான். அவன் நன்கு வளர்ந்தான்; பள்ளியில் சேர்ந்தான்; கருத்துடன் படித்தான். நாட்டு வரலாறு படிப்பதிலே அவனுக்கு ஒரு தனி ஆர்வம் இருந்தது. விடுதலை பெற்ற நாடுகளின் வரலாறுகளை எல்லாம் அவன் அடிக்கடி படிப்பான். அவற்றைப் படிக்கப் படிக்க அவனுக்குத் தேசபக்தி அதிகமாகியது. தந்தையைப் போலவே தேச விடுதலைக்குப் போராட வேண்டும் என்ற ஆர்வம் பொங்கியது.

அச்சிறுவனுக்கு வயது 12 இருக்கும். ஒருநாள் கையில் தேசீயக் கொடியுடன் அவன் நடந்து சென்று கொண்டிருந்தான். அப்போது, சிறிது தூரத்தில் கோட்டைமேல் ஆங்கிலக் கொடி பறப்பதை அவன் பார்த்தான். உடனே 'சட்' டென்று அந்த இடத்திலே நின்றான்.



"ஏ, ஆங்கிலக் கொடியே! இது எங்கள் நாடு. இந்தக் கோட்டை எங்கள் கோட்டை. எங்கள் கோட்டையில் எங்கள் நாட்டுக் கொடிதான் பறக்கவேண்டும். அந்நிய நாட்டுக் கொடியாகிய நீ பறப்பதை நாங்கள் இனிமேலும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். விரைவிலே நீ கீழே இறக்கப்படுவாய். இதோ என் தாய் நாட்டுக் கொடி. இது அங்கு தலை நிமிர்ந்து பறக்கும்" என்று ஆவேசத்துடன் கூறினான்.

அச்சிறுவன் அப்போது கூறியது 1947-ஆம் ஆண்டு பலித்துவிட்டது. ஆனால் அந்தக் காட்சியைக் காண அவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை. அதற்குப் பதினாறு ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது 24 வயதிலே அவன் தூக்கிலிடப்பட்டான்! காரணம்......?

'பாஞ்சால சிங்கம்' என்று போற்றப்பட்ட லாலா லஜபதிராய் தலைமையில் ஆங்கிலேயருக்கு எதிராக ஓர் ஊர்வலம் லாகூரில் நடந்தது. போலீஸார் அந்த ஊர்வலத்தைத் தாக்கினர். லஜபதிராய் மார்பிலே பலமாக அடி விழுந்தது. அடிபட்ட பதினெட்டாம் நாள் அவர் உயிர் துறந்தார். இதை அறிந்த மக்கள் கொதித்து எழுந்தனர். லஜபதிராயை

அடித்த ஸாண்டர்ஸ் என்ற போலீஸ் அதிகாரி சில நாட்களில் சுட்டுக் கொல்லப்பட்டார். இது நடந்து சில நாட்களில் மத்திய சட்ட சபையில் வெடி குண்டு வீசப்பட்டது.

இவற்றிற் கெல்லாம் யார் காரணம்?

பகத் சிங், இராஜகுரு, சுகதேவ் என்ற மூன்று இளைஞர்களும் முக்கியமானவர்கள் என்று கூறி, அவர்களைக் கைதுசெய்து ஆங்கில அரசினர் விசாரணை நடத்தினர். அம் மூவருக்கும் தூக்குத் தண்டனை கொடுத்தனர்.

தேச மக்கள் அனைவரும் அந்த வீர இளைஞர்களின் தேச பக்தியைக் கண்டு வியந்தனர். மகாத்மா காந்தியும், அவர்களது வன்முறையை ஆதரிக்காத போதிலும், அவர்களது தேசபக்தியைப் பாராட்டினர். அவர்களை விடுவிக்க வைஸ்ராயுடன் பேச்சு நடத்தினர்; பயனில்லை.

“தேச விடுதலைக்காகப் பாடுபட்டோம். மகிழ்ச்சியோடு உயிர் கொடுக்கிறோம். மீண்டும் இதே பாரத பூமியில் நாங்கள் பிறக்க வேண்டும். இதுவே எங்கள் ஆசை” என்று கூறிக் கொண்டே பகத் சிங்கும் அருடைய இரு நண்களும் தூக்குமேடை ஏறினர்கள். அந்த மூவரில் முதல்வரான பகத்சிங்தான் கோட்டையில் தாய் நாட்டுக் கொடி பறப்பதைப் பார்க்க ஆசைப்பட்டவர்!



# பனி மலைப் புலி



‘பனிமலைப் புலி’ என்றால் யார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்; 29,028 அடி உயரத்தில் உள்ள எவரெஸ்ட் சிகரத்திலே முதல் முதலாக ஏறி, இந்தியக் கொடியை நாட்டிய டென்சிங்கைத்தான் ‘பனி மலைப் புலி’ என்று உலகம் அழைக்கிறது.

டென்சிங்கின் முழுப்பெயர் டென்சிங் நோர்கே என்பதுதான். ஆனால், அந்தப் பெயர் அவருடைய அப்பா, அம்மா வைத்த பெயரன்று; லாமா என்னும் அவர்களுடைய மத குரு வைத்த பெயர்தான். அம்மா, அப்பா வைத்த பெயர் என்ன தெரியுமா? நாம்கியால் வாங்டி என்பதே.

பெயர் சூட்டிய சில நாட்களில் அவரை மதகுருவிடம் தூக்கிச் சென்றார்கள். குழந்

தையை வாழ்த்தி அருளவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். உடனே அவர் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தார். "இந்தப் பிள்ளை முற்பிறப்பில் மிகப் பெரிய பணக்காரனாக இருந்திருக்கிறான்" என்றார்.

"ஆ! அப்படியா!" என்று அப்பாவும் அம்மாவும் வியப்போடு கேட்டார்கள். "ஆமாம். அதனால், இப்போது நீங்கள் வைத்திருக்கும் பெயர் பொருத்தமாக இல்லை. வேறு பெயர் வைக்கவேண்டும்" என்றார்.

"என்ன பெயர் வைப்பது? நீங்களே சொல்லுங்கள்" என்றார்கள்.

"டென்சிங் நோர்கே என்பதே பொருத்தமான பெயர். டென்சிங் என்றால், மதத்தைக் காப்பவன். நோர்கே என்றால் செல்வன். நமது புத்த மதத்தைக் காக்கும் செல்வனாக இவன் விளங்குவான்" என்று கூறி வாழ்த்தினார் அவர்.

டென்சிங்கின் கூடப் பிறந்தவர்கள் பதின்மூன்று பேர். ஏழு ஆண்கள்; ஆறு பெண்கள். பதினோராவது பிள்ளையாக டென்சிங் பிறந்தார்.

டென்சிங், 'ஷெர்பா' என்ற இனத்தைச் சேர்ந்தவர். 'ஷெர்பா' என்றால் கிழக்கே இருந்து வந்தவன் என்று பொருள். வெகு காலத்துக்கு முன்பு திபேத் நாட்டிலிருந்து அவரது முன்னோர்கள் இந்தியாவிற்கு வந்தார்களாம்.



அவர்களுடைய பஞ்சாங்கத்தின்படி ஒவ்வோர் ஆண்டுக்கும் ஒரு பிராணியின் பெயர் உண்டு. மாடு, குதிரை, முயல், புலி, பாம்பு இப்படித்தான் அந்தப் பெயர்கள் இருக்கும். முயல் வருஷத்தில்தான் டென்சிங் பிறந்தாராம். அதாவது 1914 ஆம் ஆண்டு மே மாதம். ஆனால், தேதி தெரியாதாம்!

சிறு குழந்தையா யிருந்தபோது அடிக்கடி எவரெஸ்ட் சிகரத்தை டென்சிங் அண்ணாந்து பார்ப்பார். "தம்பி, அதோ பார்த்தாயா, அதுதான் பறவையும் பறக்க முடியாத அளவு உயரமான மலை!" என்று அவருடைய தாயார் அடிக்கடி சொல்வாள். அப்போதே டென்சிங்கிற்கு அந்த மலை உச்சியில் எப்படியாவது ஏறிப் பார்த்துவிட வேண்டும் என்ற ஆசை தோன்றிவிட்டது.

டென்சிங் சிறு பையனாக இருந்தபோது அவரை ஒரு லாமா (மதகுரு) ஆக்கிவிட வேண்டும் என்று அவருடைய அப்பா தீர்மானித்தார். ஒரு மடத்திலே அவரைக் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டார். அங்கே போய்ச் சேர்ந்ததும், முதலில் அவருடைய தலையை மழுங்க மொட்டை யடித்தார்கள். காவி உடை கொடுத்துக் கட்டிக் கொள்ளச் சொன்னார்கள். டென்சிங், அவர்கள் சொன்ன

படி யெல்லாம் செய்தார். ஆனாலும், அதிக நாட்கள் அங்கே அவர் தங்கி யிருக்கவில்லை.

ஒரு நாள் அந்த மடத்தில் இருந்த ஒரு லாமாவுக்கும், டென்சிங்கிற்கும் தகராறு ஏற்பட்டது. கோபத்தில் அந்த லாமா ஒரு கட்டையைத் தூக்கி 'டங்' என்று டென்சிங் கின் மொட்டைத் தலையில் போட்டுவிட்டார். அடி விழுந்ததுதான் தாமதம், டென்சிங் அந்த இடத்தை விட்டு வெகு வேகமாக வீட்டுக்கு ஓடினார். நடந்ததை அப்பாவிடம் கூறினார். "இனி அந்த மடத்துப் பக்கம் தலை காட்டவே மாட்டேன்" என்று கூறிவிட்டார்.

சில நாட்கள் சென்றன. ஒருநாள் வீட்டில் யாரிடத்திலும் சொல்லாமல் ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டார். இமயமலையில் பல பகுதிகளிலும் சுற்றித் திரிந்தார். பிறகு, மலை ஏறும் குழுவினருக்கு மூட்டை தூக்கும் கூலியாக இருந்தார். கடைசியில் ஹில்லரி என்ற வெள்ளைக்காரருடன் சேர்ந்து எவரெஸ்ட் சிகரத்தையே எட்டிப் பிடித்துவிட்டார்.

அன்று, டென்சிங்கின் மொட்டைத் தலையில் கட்டையால் அடித்தாரே ஒரு லாமா, அவருக்கு நாம் நன்றி சொல்லவேண்டும். இல்லாதபோனால், டென்சிங் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியிருப்பாரா? அங்கே இந்தியக் கொடியை நாட்டியிருப்பாரா? அவரும் ஒரு லாமாவாகத்தானே இருந்திருப்பார்?



# படகுப் பயணம்



ஜோசப், ஜான்.

இந்த இரண்டு சிறுவர்களும் வீட்டுக்குள்ளே குத்துச் சண்டை போடுகிறார்கள். சண்டை என்றால், சாதாரணச் சண்டையல்ல; ரோஷமான குத்துச் சண்டை!

பாய்ந்து பாய்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் தாக்குகிறார்கள்; கட்டிப் புரளுகிறார்கள்; பலமாகக் குத்து விடுகிறார்கள். நீண்ட நேரம் சண்டை நடக்கிறது.

சுற்றிலும் ஐந்து பெண் குழந்தைகளும், ஒரு பையனும் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கிறார்கள்.

'உம், விடாதே!'

'ஆ! அப்படித்தான்'

'ஆஹா! பிரமாதம்'

இப்படி அந்தக் குழந்தைகள் ஆரவாரம் செய்கிறுர்கள்.

ஜோசப்புக்கு வயது 14. அவன் கொஞ்சம் பருமஞக இருக்கிறுன். பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கிறுன். ஜான், அவனை விட இரண்டு வயது இளையவன். ஒல்லியாக இருக்கிறுன்; பார்ப்பதற்கு நோஞ்சாஞக இருந்தாலும், வீரமாகச் சண்டை போடுகிறுன். ஆஞலும், கடைசியில் ஜோசப்தான் வெற்றி பெறுகிறுன்.

குஸ்திச் சண்டை போடும்போது மட்டுமல்ல; பந்து விளையாடும்போதும், நீந்தும் போதும், படகு ஓட்டும்போதும், அவர்கள் பலத்த போட்டி போடுவார்கள். மற்றப் போட்டிகளில் தோற்றுப் போஞலும், நீச்சல் போட்டியில் ஜான் தோற்றதே இல்லை. அரை நிமிஷத்தில் அவன் 50 கஜ தூரம் நீந்தி விடுவான்.

விளையாட்டு நேரங்களில்தான் அவர்கள் எதிரிகள்போல் இருப்பார்கள். மற்ற நேரங்களில், இருவரும் மிகுந்த அன்போடு பழகுவார்கள். அப்படியாஞல், அந்த இருவரும் நெருங்கிய நண்பர்களோ? இல்லை, இல்லை. இருவரும் கூடப் பிறந்தவர்கள்! ஒரே தாயின் வயிற்றுப் பிள்ளைகள்! சுற்றிலும் உட்கார்ந்து குத்துச் சண்டையை வேடிக்கை பார்த்தார்களே, அவர்களும் இவர்களது சகோதர சகோதரிகளே!



அவர்களுடைய அப்பா ஒரு பெரிய பணக்காரர். சொந்த முயற்சியால் பல லட்சம் டாலர்களைச் சம்பாதித்தவர். இருபத்தைந்தாவது வயதிலே அவர் ஒரு பாங்கின் தலைவராஞர். பிற்காலத்தில், அவர் அமெரிக்கத் தூதராக இங்கிலாந்தில் இருந்தார்.

"நீங்கள் பெரியவர்களானதும், எந்த வேலையைச் செய்தாலும், நான் கவலைப்பட மாட்டேன். ஆஞல், எந்த வேலையைச் செய்தாலும், அந்த வேலையில் சிறந்து விளங்க வேண்டும். மண் வெட்டுபவஞக இருந்தாலும், உலகிலே சிறந்த மண் வெட்டுபவன் என்று பெயர் எடுக்கவேண்டும்" என்று அவர் பிள்ளைகளுக்கு அடிக்கடி அறிவுரை கூறுவார்.


சிறு வயதிலே படகு ஓட்டுவதில் மிகவும் கெட்டிக்காரஞக இருந்தான் ஜான். வாலிபஞனதும் கடற்படையிலே சேர அவன் விரும்பிஞன். லட்சாதிபதியின் மகஞக இருந்தும், ராணுவத்தில் சேரவேண்டும்; பிறந்த நாட்டுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று ஆசைப்பட்டான்.

ஆஞல், அவனை ராணுவத்தில் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டார்கள். காரணம், அவனது எடை குறைவாயிருந்ததுதான்! அதற்காக, அவன் மனம் தளரவில்லை. ஐந்து

மாதங்கள் தண்டால், பஸ்கி, ஓட்டம் முதலிய கடுமையான உடற்பயிற்சிகளைச் செய்தான். எடை ஏறியது. ஆருவது மாதம், அவனை ராணுவத்தில் கடற்படையிலே சேர்த்துக் கொண்டு விட்டார்கள். விரைவிலே அவன் யுத்தப் படகு ஒன்றின் தலைவனுனான்.

ஒரு சமயம், அவனுடைய படகு இரண்டாக உடைந்து உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. அவன், தான் தப்பியதோடல்லாமல், தன் நண்பர்களையும் வீரமுடன் காப்பாற்றினுன். அவனுடைய வீரத்தைப் பாராட்டி, ராணுவத்தினர் அவனுக்கு விருது வழங்கினுர்கள்.

சிறந்த வீரனுக மட்டுமல்ல; சிறந்த எழுத்தாளனுகவும் அவன் விளங்கினுன். 'தீரர்கள் வாழ்க்கை' என்ற அவனுடைய புத்தகத்திற்குப் பெரிய பரிசு ஒன்றும் கிடைத்தது. அவனது தந்தை கூறியதுபோல், அவன் ராணுவத்திலே சிறந்து விளங்கினுன்; புத்தகம் எழுதுவதிலே சிறந்து விளங்கினுன். இவை மட்டுமா? அமெரிக்காவின் ஜனுதிபதியாகவும் அவன் சிறந்து விளங்கினுன். ஆம், அமெரிக்காவின் 35-வது ஜனுதிபதியாக 43-வது வயதிலே தேர்ந்தெடுக்கப் பெற்ற ஜான் எப். கென்னடிதான் அந்தச் சிறுவன். அமெரிக்க ஜனுதிபதியாக விளங்கியவர்களில் கென்னடிதான் மிகவும் இளமையானவர்!



# பிள்ளைப் பருவத்திலே!

குழந்தைக் கவிஞர்
அழ.வள்ளியப்பா